★ விலை ரூபா 1-00

# ஈழநாடு

THE EELANADU

(1958 — வெள்ளிவிழா ஆண்டு — 1983)

மலர் 25 தை 12 ரபி. ஆகி 10 இதழ் 347

யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 25—1—83

## பாராளுமன்ற செயலாளர் நாயகத்துக்கு

# குட்டிமணி ராஜினமா கடிதம்

### "தமிழ் மக்களின் விடுதலையைக்காண எனது உணர்வுகள் துடிக்கின்றன"

(இ. கந்தசாமி)

பாராளுமன்ற செயலாளர் நாயகத்துக்கு, 'குட்டிமணி' என்று அழைக்கப்படும் செல்வராஜா யோகச்சந்திரன் நேற்று அனுப்பிவைத்த கடிதமொன்றில்; வட்டுக்கோட்டைத் தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினர் பதவியில் இருந்து தாம் விலகிக் கொள்வதாக அறிவித்துள்ளார்.

பாராளுமன்ற செயலாளர் நாயகத்துக்கு 'குட்டிமணி' அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது!

"ஐயா;

"நீதிநெறிகளுக்கு முரணானதும், கொடூரமான ஏற்பாடுகளைக்கொண்டதுமான பயங்கரவாததடைச்சட்டத்துக்கும் அரசாங்கத்தின் இராணுவ பொலிஸ் படைகளினால் தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட பயங்கரவாதத்துக்கும், இன்னோரன்ன தமிழின விரோத நடவடிக்கைகளுக்கும் தமிழ் விடுதலைப் போராளிகளின் எதிர்ப்பைக்

(8ம் பக்கம் பார்க்க)

## ★ தென்இந்திய யாத்திரிகர் கோஷ்டிக்கு ஏற்பட்ட பயங்கரம்!

# கோர பஸ்விபத்து: இருவர் பலி!

# 34பேர்காயம்; 6பேர்நிலைகவலை!

## கிளிநொச்சியில் சம்பவம்

(கிளிநொச்சி நிருபர் கே. வி. கே. திருலோகமூர்த்தி)

**கிளிநொச்சியில் நேற்றுக் காலை நிகழ்ந்த கோர மினி பஸ் விபத்தில், தென்னிந்திய சுற்றுலாப் பயணிகள இருவர் ஸ்தலத்திலேயே பலியானுர்கள்! முப்பத்து நான்கு பேர் படுகாயமடைந்தனர்! ஆறு பேரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது!**

நேற்றுக்காலை விபத்துக்குள்ளான தென்னிந்திய யாத்திரிகர் கோஷ்டி கடந்த 19ம் திகதி தலைமன்னாரை வந்தடைந்து திருக்கேதீஸ்வரத்தில் 4 நாட்கள் தங்கியிருந்துவிட்டு மன்னாரிலுள்ள மினிபஸ் ஒன்றை வாடகைக்கு அமர்த்திக் கொண்டு தல யாத்திரையை மேற்கொண்டனர்.

### யாழ்ப்பாணம் வந்து ..

இக்கோஷ்டியினர் நேற்று முன்தினம் மாலை நல்லூர்க் கந்தசுவாமி கோவிலில் தங்கி இருந்துவிட்டு, திருகோணமலையை நோக்கிப் புறப்பட்டனர்.

மினிபஸ் கிளிநொச்சியை அண்மித்தபொழுது, மழை சிறு தூறல்களாகப் பெய்து கொண்டிருந்தது. கிளிநொச்சி மகாவித்தியாலயத்துக்கு அருகிலுள்ள மதகின் 8 அடி ஆழமான பள்ளத்தில் மினிபஸ் சறுக்கிச்சென்று கவிழ்ந்ததாலேயே இக்கோர விபத்து ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

விபத்தில் இக்கி பின்னர் மரமொன்றுடன் மோதி உருக்குலைந்த நிலையில் மினிபஸ் காணப்படுகிறது. பஸ்ஸின் இலக்கம் 29 ஸ்ரீ 6639.

### திருமலைக்குப் புறப்பட்டனர்

இந்தியக் கோஷ்டியினர் திருகோணமலைக்கும் பின்னர் கொழும்புக்கும் சென்று 29ம் திகதி தலைமன்னாரிலிருந்து தமிழ்

(8ம் பக்கம் பார்க்க)

## 36 பேருக்கு எதிராக குற்றப்பத்திரம் தாக்கல்!

(கொழும்பு)

ஜனாதிபதி தேர்தல் சட்டத்திற்கு மாறாக நடந்ததாகக் கருதப்படும் 36 பேருக்கு எதிராக குற்றப்பத்திரம் தாக்கல் செய்யுமாறு கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இவர்களில் நான்காவது சந்தேகநபரான சரத்விக்கிரமடயஸ் அரசதரப்பு சாட்சியாக மாறியுள்ளதால் அவருக்கெதிராக குற்றப்பத்திரம் தாக்கல்

(8-ம் பக்கம் பார்க்க)

## நித்தி, நிர்மலா ஆட்கொணர்வு மனு: ஆட்சேபம் தெரிவிக்க அரசுதரப்பிற்கு அவகாசம்!

(கொழும்பு)

யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் திரு. எம். நித்தியானந்தன் அவரது பாரியார் நிர்மலா ஆட்கொணர்வு மனு அப்பீல் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது, அரசதரப்பு சட்டத்தரணி கேட்டுக்கொண்டதற்கிணங்க, ஆட்சேபம் தெரிவிக்க 4 வாரகால அவகாசம் வழங்கப்பட்டது.

இம்மனு கொழும்பு அப்பீல்

(8-ம் பக்கம் பார்க்க)

## இந்திய தூதரக அதிகாரிகள் குழு இன்று யாழ். வருகை

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சியில் நிகழ்ந்த மினிபஸ் விபத்தில் காயமடைந்து யாழ் ஆஸ்பத்திரியில் சிகிச்சைபெற்றுவரும் தமிழக யாத்திரீகர் கோஷ்டியினருக்கு யாழ். லயன்ஸ் கழகத்தினர் துணிவகைகளும், உணவுகளும் அன்பளிப்பாக வழங்கி அவர்களது நலன்களைகவனித்துவருகின்றனர்.

லயன் டாக்டர் எஸ். சுப்பிரமணியம், லயன் இம்மானுவல் ஜோசப், லயன் விக்டர் இம்மானுவல், லயன் எம். பி. நவரத்தினம், லயன்ஜி. யுகேந்திரன், லயன் எஸ். அற்புதானந்தன் ஆகியோர்காயமடைந்தவர்களைப்பார்வையிட்டு அன்பளிப்புகளை வழங்கினர் .

### யாழ். எம். பி. ஆறுதல் கூறினர்

யாழ். எம். பி. திரு. வெ. யோகேஸ்வரன் விபத்து குறித்து அறிந்ததும் உடனடியாக யாழ் ஆஸ்பத்திரிக்குச் சென்று பார்வையிட்டு ஆறுதல் கூறினர்.

கொழும்பிலுள்ள இந்திய தூதரகத்தைச் சேர்ந்த இரண்டாவது செயலாளரான திரு. வாசுதேவாவுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு, திரு. யோகேஸ்வரன் நிலைமைகளைத் தெரிவித்தார்.

இந்திய தூதரகத்தைச் சேர்ந்த அதிகாரிகள் குழுவொன்று இன்று யாழ்ப்பாணம் வருகிறது. இக்குழுவினர் கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்குச் சென்று காயமடைந்தவர்களைப் பார்வையிடவுள்ளனர். (மா)

## சுவீப் முடிவுகள்

(கொழும்பு)

கொழும்புத்தலைமையகத்தில் நேற்று இழுக்கப்பட்ட தேசிய லொத்தர்சபையின் 916வதுசுவீப்பின் முதல்மூன்று பரிசுகளும் வருமாறு:

முதலாவது பரிசு
13 D 0454
ரூ. 1,80,400

இரண்டாவது பரிசு
13 F 0175
ரூ. 67,650

மூன்றுவது பரிசு
04 F 0549
ரூ. 22,550

(மிகுதிப்பரிசுகள் விபரம் நாளை வெளிவரும்)

உ
சிவமயம்

## விவாஹ சோபன அழைப்பு

அன்புடையீர் !

எல்லாம் வல்ல இறைவன் திருவருள் துணைகொண்டு ஸ்வஸ்தி ஸ்ரீநிகழும் மங்களகரமான துந்துபி வருடம் தை திங்கள் 13-ம் நாள் (26-1-83) புதன்கிழமை மிருகசீரிட நக்ஷத்திரமும் சித்த யோகமும் கூடிய சுப தினத்தில் காலை 6 மணி 36 நிமிஷம் முதல் 7-00 மணி 39 நிமிஷம் வரை உள்ள மகர லக்கன சுப முகூர்த்தத்தில்,

பிரம்மஸ்ரீ சே. கிருஷ்ணஐயர் அவர்களின் கனிஷ்ட புதல்வன் சிரஞ்சீவி
நாராயண சர்மாவுக்கும்
(யாழ். கதிரேசன் கோயில் பிரதம குரு. யாழ். கோட்டை முனீஸ்வரன் பிரதம குரு)

பிரம்மஸ்ரீ ச. சுப்பிரமணிய சர்மா தம்பதிகளின்
(உப-தபால் அதிபர், கீரிமலை)
புதல்வி சௌபாக்கியவதி
கல்பனு கௌரிக்கும்

கீரிமலையிலுள்ள மணமகள் இல்லத்தில் கன்னிகாதான பாணிக்கிரஹண திருமாங்கல்ய தாரணம் செய்ய பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தங்கள் குடும்ப சஹிதம் சமுகந்தந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு: சமாவர்த்தனம் வில்லூன்றிப் பிள்ளையார் கோயிலில் உள்ள மணமகன் இல்லத்தில் அதிகாலை 4 மணிக்கு நடைபெறும்.
(2) வரவேற்பு உபசாரம் அன்று மாலை 4 மணிக்கு வில்லூன்றிப் பிள்ளையார் கோயிலில் உள்ள மணமகன் இல்லத்தில் நடைபெறும்.
(3) சனிக்கிழமை (29-1-83) பிற்பகல் 5 மணிக்கு மணமகள் இல்லத்தில் கீரிமலையில் வரவேற்பு உபசாரம் நடைபெறும்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை விரும்பும்

கோமதி அம்மா கிருஷ்ணஐயர்
ச. சுப்பிரமணியசர்மா தம்பதிகள்
உப-தபால் அதிபர், கீரிமலை

வரவேற்பாளர்கள்:
கி. வைத்தீஸ்வரக் குருக்கள் தம்பதிகள் (வில்லூன்றிப் பிள்ளையார் கோயில் பிரதம குரு)
கி. யோகநாதசர்மா, கி. பரமேஸ்வரசர்மா
வீரகத்திப் பிள்ளையார் கோயில், வில்லூன்றி, யாழ்ப்பாணம்.

சுப்பிரமணியசர்மா சகோதர சகோதரிகள்
கா. சந்திரசேகரசர்மா தம்பதிகள்
சு. கௌரிபாலசர்மா

5900

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கச்சேரிக்கு அருகிலுள்ள சோமசுந்தரம் அவினியூ வீதியும் ரயில் பாதையும் சந்திக்கும் இடத்திற்கு அருகில் 1½ பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தபால் மூலம் தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:- டாக்டர் நா. சண்முகநாதன், முத்துப்பிள்ளை மருத்துவ நிலையம், கோணுவலை, வரணி. 5925

தோட்டம் செய்யப்பட்டு வரும், வீடு கட்டக்கூடியதுமான 9 பரப்பு, உடுவில் கிழக்குப் பகுதியில் விற்பனைக்கு உண்டு. விபரங்களுக்கு M. திருஞானசம்பந்தன், 350 பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி (2ம் கி.மீ. கட்டை அருகில்) யாழ்ப்பாணம். [5932]

## பயிற்சி

கொம்பியூட்டர் புறோகிறுமிங், றேடியோ-டெலிவிஷன் எலக்றிக்கல் வயறிங், Hotel Management, குறுகிய காலப் பயிற்சிகள். Spoken English ஒரு மாதத்தில் பேச, எழுத வாசிக்கப் பயிற்சிகள். அனைவரும் சேரலாம். விபரம் நேரில் The School of Computer Studies, 52/1, கனகரத்தினம் கட்டிடம், [வீனஸ் றெக்கோடிங்பார் மேல்மாடி], ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 5856

## தவறிவிட்டதா?

பெறுமதிமிக்க கைக்கடிகாரமும், புதிய செருப்பு ஒரு சோடியும் கொண்ட பார்சல் ஒன்று எமது கடையில் கைவிட்டுள்ளனர். உரியவர் அத்தாட்சி காட்டி எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம். என். ஜெயரத்தினம், 320, நாவலர் வீதி [செட்டித்தெரு சந்தி], யாழ்ப்பாணம். 5950

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

## பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில்

கோப்பாய், கோப்பாய் தெற்கு பழந்தெருவைச் சேர்ந்த காலஞ்சென்ற கந்தையா சிவசோதி என்பவரின் மரணசாதனமில்லாச் சொத்தின் விடயமாக.

— மரணமெய்தியவர்.

சிவசோதி கைம்பெண் விஜயாள் கோப்பாய் தெற்கு, கோப்பாய்.

— மனுதார்.

மரணசாதன நியாயாதிக்கம்
இல. 3707

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதனவழக்கு மேலே பெயர் குறிப்பிட்ட இறந்துபோனவரின் மரணச் சொத்தை நிர்வகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப்பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1983ம் ஆண்டு தை மாதம் 7ம் நாளன்று முற்பகல் 9-30 மணிக்கு இந் நீதிமன்றத்தின்முன்னர் தோன்றி, அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை முற்றான தாக்கப்படலாகாதென்பதற்கு காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர்,

1982ம் ஆண்டு மார்கழி 7ம் திகதி.

நீதிமன்றக் கட்டளைப்படி ஒப்பம்
த. குலஞானம்
பதிவாளர்

வரைவு
இ. சிவசுப்பிரமணியம்.
மனுதார் சட்டத்தரணி.
5840

## வெல்டர் தேவை

குறைந்தது இரண்டு வருட காஸ் வெல்டிங் (Gas Welding) அனுபவமுள்ளவர்கள் உடன் விண்ணப்பிக்கவும்.

டைனமிக் என்ஜினியரிங் லிமிற்றட்,
காங்கேசன்துறை வீதி,
தெல்லிப்பளை
5947

## பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில்

கோண்டாவில் என்னுமிடத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற ஆறுமுகம் பாலகிருஷ்ணன் என்பவரின் மரணசாதனமில்லா மரணச்சொத்துக்களின் விடயத்தில்

மரணமெய்தியவர்

ஆறுமுகம் பாலகிருஷ்ணன் கைம்பெண் சரஸ்வதி, கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்.

மனுதார்

வழ. இல. த/3703

மேலேயுள்ள இலக்கம் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிட்ட இறந்துபோனவரின் மரணச்சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1982-ம் ஆண்டு மார்கழி மாதம் 17-ந் திகதியன்று முற்பகல் 9-00 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்டுள்ளபின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றான தாக்கப்படலாகாதென்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

1982-ம் ஆண்டு கார்த்திகை மாதம் 29-ந் திகதி.

இந்நீதிமன்ற கட்டளைப்படி
தா. குலஞானம்,
பதிவாளர்,

என்னால் வரையப்பட்டது:
சி. சிதம்பரநாதன்,
மனுதாரின் சட்டத்தரணி,
17-12-82

காரணம் காட்டும் தவணை 27-1-83க்கு நீடிக்கப்பட்டுள்ளது.

தா. குலஞானம்,
(5951) பதிவாளர்.

## இருட்டில் மக்கள் சிரமம்

[கோண்டாவில்]

திருநெல்வேலி பாற்பண்ணை வீதியில் மின் குமிழ்கள்யாவும் பல மாதங்களாக எரியாத நிலையில் இருந்து வருகின்றன. இதன் காரணமாக இப்பகுதிப் பொதுமக்கள் இரவு நேரத்தில் பெரும் சிரமத்திற்கு உள்ளாகின்றார்கள்.

[அ]

## மெயில் ரயில் தாமதம்

[யாழ்ப்பாணம்]

காங்கேசன்துறையிலிருந்து கொழும்புக்கு நேற்று முன்தினமிரவுசென்ற தபால் புகையிரதம் சுமார் 5 மணி நேரம் தாமதித்தே கோட்டை புகையிரத நிலையத்தை நேற்றுக் காலை சென்றடைந்தது.

இத்தபால் புகையிரதம் கொழும்பிலிருந்து வந்து கொண்டிருந்த புகையிரதத்திற்கு இடம் ஒதுக்குவதற்காக நாவற்குழி ரயில் நிலையத்தில் பின்னோக்கிச் சென்று கொண்டிருந்த போது பிரயாணிகள் பயணம் செய்த பெட்டியொன்று இலேசாகத் தடம் புரண்டது.

இதனால் பல பிரயாணிகள் தமது கொழும்பு பயணத்தை தனியார் பஸ்களில் தொடர்ந்து மேற்கொண்டனர். சில பயணிகள் பிரயாணத்தை ரத்துச்செய்து வீடுகளுக்குத் திரும்பினர். [வெ]

## ஐந்து மணி நேரம்

யாழ்ப்பாண அக்கடமி

க. பொ. த. உயர்தர பரீட்சை ஆகஸ்ட் 1984

## மீட்டல் வகுப்புகள்

84ம் ஆண்டு பரீட்சைக்கான மீட்டல் வகுப்புகள் 31-1-83ல் ஆரம்பமாகின்றன. 81ம் ஆண்டில் குறைந்த பெறுபேறுகள் பெற்றவர்களும் விண்ணப்பிக்கலாம். பாடத்திட்டம் முற்றாக மீட்டல் செய்யப்படும். சேர விரும்புவோர் அக்கடமி காரியாலயத்தில் விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

மேலும் விபரங்கள் தேவையாயின் காரியாலயத்தில் அறிந்துகொள்ளலாம்.

அதிபர்

தொலைபேசி எண்: 22617
376, பிரதானவீதி,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம். [5895]

உ
சிவமயம்

## திருமண அழைப்பு

அன்புடையீர்,

நிகழும் துந்துபி வருடம் தைத்திங்கள் 15-ம் நாள் (28-1-83) வெள்ளிக்கிழமை காலை 8-30 — 9-30 மணி வரையுள்ள சுபமுகூர்த்தத்தில்

திருநிறை செல்வன் **சோமலிங்ககுமார்** அவர்களுக்கும்

திருநிறை செல்வி **சிவகுமாரி** அவர்களுக்கும்

தொண்டமனாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தில் திருமணம் நடைபெற இருப்பதால் அத்தருணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

திரு. சோ. சடாட்சரம்,
(இளைப்பாறிய தபாலதிபரும், முன்னாள் கிராமசபைத் தலைவரும் நாவற்குளி)
நாவற்குளி,
கைதடி.

திருமதி சி. சிதம்பரநாதன்,
திரு. திருமதி பஞ்சலிங்கம்,
திரு. சிவராஜன்,
திரு. லோகநாதன்,
செல்வி விஜயகுமாரி,
18/5, சீனியர் லேன்,
கலட்டி, யாழ்ப்பாணம்,

(5884)

## காணி தேவை

யாழ். குடாநாட்டில் கீழ் காணப்படும் இடங்களில் வீதிக்கு மிக சமீபமாக முப்பது (30) பரப்பிற்கு மேற்பட்ட காணித்துண்டுகள் தேவைப்படுகின்றன:-

1. பலாலி வீதி வசாவிளான்வரை
2. கண்டி வீதி பளை வரை
3. காங்கேசன்துறை வீதி தெல்லிப்பளைவரை
4. பருத்தித்துறை வீதி அச்சுவேலி வரை
5. மானிப்பாய் வீதி பண்டத்தரிப்பு வரை

விபரங்களுக்கு:-
தோட்டக்காணிப் பிரிவு
த பினான்ஸ் கம்பனி லிமிட்டெட்,
TFC
249, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021 - 23680

## திருமண அழைப்பு

அன்புடையீர்!

ஸ்ரீ வாலாம்பிகா சமேத ஸ்ரீ வைத்தீஸ்வரர் திருவருளை முன்னிட்டு நிகழும் துந்துபி வருஷம் தைமாதம் 13-ந் திகதி (26-1-1983) புதன்கிழமை காலை 6-03 மணி முதல் 7-15 மணி வரை உள்ள மகர லக்கினத்தில்

எனது சகோதரன் லேற்பாண்டியன் குமாரி திருநிறை செல்வி **மாதவிக்கும்** யாழ்ப்பாணம் கந்தப்பசெட்டியார் அவர்களின் குமாரன் திருநிறை செல்வன் **K. அசோகனுக்கும்**

எனது குமாரன் திருநிறை செல்வன் **அசோகனுக்கும்** பாண்டிய சுரேந்திரன் அவர்களின் சகோதரன் (லேற்பாண்டியன்) குமாரி திருநிறை செல்வி **மாதவிக்கும்**

திருச்சி அலெக்ஸாண்டிரியா ரோடு கண்டோன்மென்ட் ஹோட்டல் லக்ஷ்மி திருமண ஹாலில் நிகழவிருக்கும் திருமணத்திற்கு தாங்களும் சுற்றஞ் சூழ வந்திருந்து மணமக்களை வாழ்த்தியருள வேண்டுகிறோம்.

தங்கள்
வை. சுரேந்திரன்
பாண்டி

தங்கள்
வை. கந்தப்பச் செட்டியார்

தங்கள் நல்வரவை எதிர்பார்க்கும்

S. ராஜகோபாலபிள்ளை
S. வைத்தியநாதசுவாமிபிள்ளை
V. முத்துகாயாரோகணம் செட்டியார்
.V சுந்தரலிங்கம் செட்டியார்

(5957)

# ‘கொஸ்மஸ்’ இந்துமாகடலில் விழுந்தது!

## அமெரிக்க - சோவியத் விஞ்ஞானிகள் அவதானித்தனர்

லண்டன், ஜன. 24

உலக நாடுகளைப் பெருங் கலக்கத்திற்கும், பரபரப்புக்கும் உள்ளாக்கிய சோவியத் அணுசக்தி செய்மதி ‘கொஸ்மஸ்-1402’இன் முக்கிய பாகம் இன்று அதிகாலை 3-55 மணியளவில்(இலங்கைநேரம்) இந்து சமுத்திரத்தில் விழுந்தது!

‘கொஸ்மஸ்–1402’ விழுந்த இந்து சமுத்திர வலயம், 25 பாகை தென் அகலக் கோடும், 84 பாகை கிழக்கு நெடுங் கோடும் சந்திக்கும் இடமாகும்.

இந்து சமுத்திரப் பகுதியில் தியாகோகாஸியா தீவிற்கு 1,116 கிலோ மீட்டர் தொலைவிலேயே ‘கொஸ்மஸ்’ அணுசக்தி செய்மதியின் முக்கிய உறுப்பு விழுந்தது. இந்த உறுப்பின் எடை 8000 இருத்தல்களாகும்.

‘கொஸ்மஸ் செய்மதி’ விண்வெளியிலிருந்து வான வெளியில் பிரவேசிப்பதையும், அதன் நடமாட்டத்தையும் சோவியத் அவதானிகளுடன் அமெரிக்க அவதானிகள் உட்பட தியாகோகாஸியா விலுள்ள அமெரிக்க இராணுவத் தளமும் அவதானித்தபடி இருந்தது.

இந்த அணுசக்தி செய்மதி விழுந்த இடம் கடல் பரப்பாகவே இருந்தது. தீவுகளோ அல்லது வேறு நிலப்பரப்புகளோ விழுந்த இடத்திற்கருகில் அமைந்திருக்கவில்லை.

இதனால் ‘கொஸ்மஸ்’ஸின் கதிரியக்கத் தாக்கம் குறைவாகவே இருந்திருக்குமென்று அமெரிக்க அவதானிகள் கருதுகின்றனர்.

கட்டுப்பாட்டு நிலையத்தின் தொடர்புகளற்ற நிலையில் இந்துசமுத்திரத்தில் விழுந்த ‘கொஸ்மஸ்’மூன்று பிரிவுகளாகவே வெடித்திருந்தது.

வானவெளியை ஊடறுக்கும் போது இந்த செய்மதி எரிந்து சாம்பராகிவிடும் அல்லது முழுமையாகவே வந்து பூமியில் விழுந்து பெருஞ் சேதத்தை உண்டுபண்ணுமென்று உலக விஞ்ஞானிகள் பலரிடையே முரண்பட்ட கருத்துகள் நிலவி வந்தமை வாசகர் அறிந்ததே.

‘கொஸ்மஸ்’ஸின் வீழ்ச்சிக்குப் பின்னர் வெளியாகியுள்ள தகவல்களில், இதன் சில பகுதிகள் வானவெளியை ஊடறுத்த குறுகிய நேரத்தில் எரிந்து சாம்பராகி விட்டதென்றும், எஞ்சிய சிலசிதைவுகள் மட்டுமே இதன் பெரும் பாகத்துடன் விழுந்திருக்குமென்றும் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதத்திலேயே இந்த அணுசக்தி செய்மதியான ‘கொஸ்மஸ்–1402’ சோவியத் யூனியனால் விண்வெளிக்கு அனுப்பப் பட்டது. டிசம்பர் 8ம் திகதி கட்டுப்பாட்டுநிலையத்துடனான தொடர்பை இது துண்டித்து படிப்படியாக விண்வெளியிலிருந்தும் வானிவெளியை நோக்கி நகர்ந்து வரலாயிற்று. (கி)

## கடல்ஆமை இனவிருத்தியில் தமிழக அரசு அக்கறை!

சென்னை, ஜன. 24

கடல் ஆமை இனங்களைப் பெருகச்செய்யும் நடவடிக்கைகளில் தமிழக அரசு அக்கறை காட்டி வருகிறது.

வனவிலங்கு அதிகாரியான திரு வித்யாசாகர் இந்த இனப் பெருக்க நடவடிக்கைகளின் பொருட்டு பல திட்டங்களை அமுல்படுத்தி வருகிறார்.

கோடைக்கரை என்ற இடத்திலேயே கடல் ஆமை விருத்திக்கான ஆரம்ப நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இங்கு கரையோரங்களில் கடல் ஆமைகளினால் இடை வைக்கப்படும் முட்டைகள் சேகரிக்கப்பட்டு வருகின்றன. இவ்வாறு சேகரிக்கப்படுபவை பாதுகாப்பான இடங்களில் வைக்கப்படும். பின்னர் குஞ்சுகள் வெளியானதும், சிறிது காலத்தில் அவை கடலினுள் விடப்படும்.

ஒரு வாரத்தில் மட்டும் கோடிக்கரையில் 1200முட்டைகள் சேகரிக்கப்பட்டுள்ளன.

இரவுநேரங்களிலேயே கடல் ஆமைகள் கரையோரங்களில் முட்டையிடுவதுவழக்கமாகும். இவ்வாறு இந்த ஆமைகள் தமது முட்டைகளை மணற்பரப்பினுள் இட்டு விட்டுச் சென்றதும் சிறிது காலங்களில் குஞ்சுகள் அவற்றிலிருந்து வெளியாகி கடலை நோக்கிச் செல்கின்றன.

இவ்வாறு செல்கின்ற ஆமைக் குஞ்சுகள் போதிய பாதுகாப்பில்லாத பட்சத்தில் விஷமிகளால் பிடிக்கப்படுகின்றன. சில பறவை இனங்களா

(6-ம் பக்கம் பார்க்க)

## நேதாஜி சிறப்பாண்டு

புதுடில்லி, ஜன. 24

இந்திய விடுதலைப்போரில் திரம்மிக்க வீரராகத் திகழ்ந்த நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் சிறப்பாண்டுவிழா இந்தியாவில் பரவலாகக்கொண்டாடப் பட்டுவருகிறது.

விடுதலைப் போராட்டங்களில் நம்மவருக்கு உணர்வூக்கம் அளித்தவர் நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ்’ என்று புதுடில்லியில் நடைபெற்ற நேதாஜி கூட்டமொன்றில் பிரதமர் திருமதி இந்திரா காந்தி கூறினார்.

இந்த விழாவில், வீரர் சுபாஷ் சந்திரபோஸின் அன்றைய மெய்க்காப்பாளர் உட்பட, உறவினர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

வெளிநாட்டு ஆராய்ச்சியாளர்கள் பலர் நேதாஜி சுபாஷ் சந்திரபோஷ் பற்றி ஆராய்ச்சிகள் செய்யவிருப்புவது பற்றியும், அவர்பற்றிய தஸ்தாவேஜுக்களை மேலும் சேகரிப்பது குறித்தும் இந்தவிழாவில் தெரிவிக்கப்பட்டது.

இந்த சிறப்பாண்டு விழாக்களின் ஓர் அங்கமாக ஜனாதிபதி, ஸெய்லிசிங் வங்காளத்திலுள்ள நேதாஜி சுபாஷ் சந்திரபோஷின் இல்லத்தையும் தரிசித்தார். [கி]

## ஆசிய சமாதானத்தை உறுதிப்படுத்துவதில் புதுடில்லிமாநாடு பெரும் பங்குவகிக்கும்

புதுடில்லி ஜன 24

‘‘அணுவாயுத அச்சுறுத்தலை அகற்றுவதிலும், ஆசியாவில் ஆயுதங்கள் குவிவதைத் தடுத்து சமாதானத்தை நிலைநிறுத்துவதும் கூட்டுச்சேரா இயக்கத்தின் அடுத்த உச்சி மகாநாடு காத்திரமான பங்களிப்பைச் செய்யும் என்பதில் சந்தேகமில்லை. இதைத் தடுப்பதற்கு உலகின் பிற்போக்குச் சக்திகள் பெரும் பிரயத்தனமெடுத்து வருகின்றன’’ என்று இங்கு நடைபெற்ற ஆசிய திந்திய சமாதான ஒருமைப்பாடு இயக்கத்தின் பத்திரிகையாளர் மகாநாட்டில் உலக சமாதான கவுன்சிலின் தலைவர் திரு. ரொமேஷ் சந்திரா கூறினார்.

‘‘மேற்குலக நாடுகளின் ஆசை வார்த்தைகளினால் ஈர்க்கப்பட்ட சில அணிசேரா நாடுகள் உச்சி மகாநாட்டைப் பிரதான விவகாரங்களிலிருந்து இதை திருப்புவதற்காக இரண்டாந்தர விஷயங்களை புதுடில்லியில் எழுப்பத் தீர்மானித்துள்ளன’’ என்று அவர் எச்சரிக்கை செய்தார்.

புதுடில்லியில் நடைபெறவிருக்கும் உச்சிமகாட்டிற்குப் பேராதரவு கிடைத்திருப்பதும், திருமதி இந்திரா காந்தியின் தலைமையில் 7வது உச்சி மகாநாடு இந்தியாவில் நடைபெறுவதைப் பெரும்பாலான கூட்டுச்சேரா இயக்க நாடுகள் வரவேற்றிருப்பதும் இந்தியாவின் சமாதானக் கொள்கைக்கும் கிடைத்துள்ள பெரும் கௌரவமே என்றும் திரு. ரொமேஷ் சந்திரா தெரிவித்தார்.

‘‘புதுடில்லி மகாநாடு சமாதானம், ஆயுதப்பரிகரணம், தேசங்களின் சுதந்திரத்தைப் பாதுகாத்தல் போன்றவற்றில் மிக அனுகூலமான பாத்திரத்தை வகிக்கிறது. அதனால் இதைச் சீர்குலைக்கப் பிற்போக்குச் சக்திகள் முனைந்துள்ளன. ஆபிரிக்க ஒற்றுமை ஸ்தாபனத்தின் உச்சிமகாநாட்டை தேவையற்ற விஷயங்கள் மூலம் பயனற்றதாக்கியதைப் போல் புதுடில்லி மகாநாட்டையும் செய்ய விரும்புகின்றன’’ என்றும் அவர் கருத்து வெளியிட்டார்.

## எண்ணெய் நாடுகள் உற்பத்தியைக்குறைக்கமுடிவு

வைதங் ஜன 24

மசகு எண்ணெயின் உற்பத்தியை ஒரு கோடியே 75 லட்சம் பீப்பாவாகக் குறைப்பதற்கு எண்ணெய் உற்பத்தி நாடுகள் தீர்மானித்துவருகின்றன.

எண்ணெய் வளத்தினைப் பாதுகாக்கும் வகையிலேயே இந்த நடவடிக்கை எடுக்கப் படவிருக்கின்றது.

இது தொடர்பாக உலக எண்ணெய் உற்பத்தி நாடுகளின் பிரதிநிதிகள் அண்மையில் கூடி ஆராய்ந்தார்கள்.

இக்கூட்டத்தில் உலகில் அதிகளவு எண்ணெய் உற்பத்தி செய்யும் நாடான சவூதி அரேபியா, தனது உற்பத்தியை 50 லட்சம் பீப்பாவாலும் இரண்டாவது பெரும் எண்ணெய் உற்பத்தி நாடான ஈரான் 25 லட்சம் பீப்பாவாலும் தமது உற்பத்திகளைக் குறைக்க முன்வந்துள்ளன. (கி)

## ‘‘மத்திய அரசு நீதிபதிகளை தன்னிச்சையாக இடம் மாற்றாது’’ –இந்திய நீதி அமைச்சர்

சென்னை, ஜன. 24

‘‘நீதிபதிகளை தன்னிச்சையாக இடம் மாற்றும் நோக்கம் மத்திய அரசுக்குக் கிடையாது’’ என்று இந்திய மத்திய அரசின் நீதித்துறை அமைச்சர் திரு. ஜெகந்நாத் கௌசல் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாட்டுக்கு விஜயஞ் செய்திருந்தஇவருக்கு சென்னை வழக்கறிஞர்கள் கழகம் வரவேற்புபசாரமொன்றை வழங்கிக் கௌரவித்தது. அந்த வைபவத்திலேயே இவர் மேற்கண்டவாறு கூறினார்.

திரு. ஜெகந்நாத் கௌசல் மேலும் கூறியதாவது: ‘‘நீதிபதிகளின் நலனை முன்னிட்டும் அவர்களது அலுவல்களுக்கும், அந்தஸ்துக்கும் பங்கம் ஏற்படாதவகையிலும் புதிய வழிகாட்டி நெறியொன்றை மத்திய அரசுதயாரித்துவருகிறது. இந்த வழிகாட்டி நெறி தயாரானதும் அதற்கமையவே நீதிபதிகள் குறித்த நடவடிக்கைகள் அமுலாக்கப்படும். அதுவரை எக்காரணம் கொண்டும் மனம் போனபடி அவர்களை மத்திய அரசு இடமாற்றஞ் செய்யாது.

ஒரு மாநிலத்தின் தலைமை நீதிபதி, மற்றும் நீதிபதிகள் வேறொரு மாநிலத்தைச் சேர்ந்தவர்களாக இருப்பதையே நான் விரும்புகிறேன். ஏனெனில் அதன்மூலமே நேர்த்தியான தீர்ப்புகளை எதிர்பார்க்க முடியும் என்றார்.

## புதிய பொருளாதாரக் கொள்கை: வளர்முக நாடுகள் அக்கறை

காட்மண்டு ஜன 24

புதிய பொருளாதார ஒழுங்கு பற்றிய பிரச்னையை புதிதாக விடுதலை பெற்ற ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகள் பல சர்வதேச அரங்குகளில் தீவிரமாக எழுப்பி வருகின்றன

இப்பிரச்னை மீண்டும் நேபாள அரசாங்கமும் ஐ. நா. வின் கைத்தொழில் அபிவிருத்தி ஸ்தாபனமுமான ‘யுனிடோ’வும் சேர்ந்து நடத்திய வளர்முக நாடுகளின் கைத்தொழில் அமைச்சர்களது மகாநாட்டில் எழுப்பப் பட்டுள்ளது.

அண்மையில் இங்கு நடைபெற்ற இம் மகாநாட்டில் இந்தியா, பங்களாதேஷ், பிலிப்பைன்ஸ், தாய்லாந்து, துருக்கி, இலங்கை, சிங்கப்பூர், மலேஷியா உட்பட 19 நாடுகள் கலந்து கொண்டன.

புதிய பொருளாதாரக் கொள்கையை உருவாக்குவதில் வளர்முக நாடுகள் தொடர்ந்து முயற்சித்து வந்த போதும், இதை ஸ்தாபிப்பதில் இன்னமும் கணிசமான முன்னேற்றம் காணப்படவில்லை என்று நேபாள கைத்தொழில் அமைச்சர் திரு. பாலராமா கர்திமாகர் கூறினார்.

வளர்ச்சி பெற்ற நாடுகளுக்கும் வளர்முக நாடுகளுக்கும் இடையிலான பேச்சுக்களில் எந்தவித முன்னேற்றமும் காணப்படாதது குறித்து வேறும் பிரதிநிதிகள் பலர் கவலை தெரிவித்தனர்.

வளர்முக நாடுகளை சுரண்டி எடுக்கும் வளர்ச்சி பெற்ற நாடுகள், சர்வதேசப் பொருளாதார உறவுகளை, நியாயமான ஜனநாயக அடிப்படைகளில் புனர் நிர்மாணம் செய்யும் முயற்சிகளை தடுப்பதற்காக வளர்முக நாடுகள் மீது நிர்ப்பந்தம் கொண்டு வருகின்றன என்றும் இதற்காக வளர்முக நாடுகளுடனான தமது வர்த்தகத்தைப் பாதுகாக்கும் கொள்கையை வளர்ச்சிபெற்ற நாடுகள் பின்பற்ற ஆரம்பித்துள்ளன என்றும் இப்போதுள்ள சுங்கத்தீர்வை மற்றும் வரிகளுடன் மேலதிகமான தடைகளைப் போட்டு வளர்முக நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யும் பொருட்களைத் தடைசெய்து வருகின்றன என்றும் இம்மகாநாட்டில் கலந்து கொண்ட பிரதிநிதிகள் கண்டனம் தெரிவித்தனர்.

**மணிவாக்கு**

பிறப்புக்கும் இறப்புக்கும் ஒரே ஒரு மருந்து;
அந்த இடைவெளியில் இன்புற்றிருப்பதே!

— ஜோர்ஜ் சந்தாயன

# நமது நோக்கு

## சீமெந்தும் தேசிய ஒற்றுமையும்

காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலைக் கட்டிடத்தின் கடைசிப் பாகம் முடிவடைந்தது ஒரு சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த சாதனையென்று தொழில் அமைச்சர் சிறில் மத்யூ பாராட்டியிருக்கிறார்.

உலகிலே இவ்வித சாதனைக்கொப்பிட அமெரிக்காவையே குறிப்பிட்ட அமைச்சர், அங்கு அந்த வேலை 17 மாதங்களில் முடிவடைந்ததென்று சொல்லியிருக்கிறார்.

அந்தக் குபேர நாட்டில் அவ்வளவு காலம் தேவைப்பட்டால் எங்கள் நாட்டில் உலகின் இப்பகுதியில் மிகப் பெரிய தொழிற்சாலை காங்கேசன்துறையில் நிறுவப்படுவதற்கு 2 வருடம் 15 நாட்கள் தேவைப்பட்டது ஒரு உலக சாதனையென்பதில் என்ன சந்தேகம்? அவர் இதனை மெச்சுவதில் நியாயமுண்டு.

அரசாங்கத்தின் திட்டம்; அமைச்சின் நிர்வாகத் திறமை, என்றாலும் இதனைக் கட்டி எழுப்பியவர்கள் இப்பகுதி ஊழியர்களே!

இந்தப் பெருமையை எடுத்து விளக்க அமைச்சர் தவறவில்லை; உண்மையில் அதற்கு மேலாக அவர் கருத்துக்கள் வழங்கியிருப்பது நாம் இந்த அரசியல் கட்டத்தில் அவதானிக்க வேண்டியதொன்று.

வடபகுதி மக்களின் செயற்றிறனையோ அல்லது அவர்களின் மனோபலத்தையோ எவரும் எக்காலத்திலும் பாராட்டத் தவற மாட்டார்கள் என்பது அமைச்சரின் புகழ்மாலை.

இன்று உருவாக்கப்பட்ட இம்மாபெரும் உற்பத்திச் சாலை சீமெந்தின் விலை குறையவும் நாட்டில் வாழும் நடுத்தரப் பிரஜைகள் - ஏன் வறிய குடும்பங்கள் தானும் - தமக்கென ஒருவீடு அமைப்பதற்கு உதவும்; பருத்தித்துறை தொடக்கம் மாத்தறை வரைக்கும் இந்தச்சேவை பயன்படும் என்றும் சொல்லியிருக்கிறார்.

மேலும்; சீமெந்துபோல இவ்விரு பெரும் சமூகங்களைப் பிணைக்கும் சக்தியும் இச்சேவையில் உண்டு. இனி ஆரம்பமாகவிருக்கும் ஐந்து கோடி ரூபா செலவில் விருத்தி செய்யப்படும் கே. கே. எஸ். துறைமுகம் வடபகுதி இளைஞருக்கு ஒரு வரப்பிரசாதம் என்ற ஆசை வார்த்தையும் பேசியிருக்கிறார்.

உண்மையில் வேலையில்லாமையே இன்றைய குழப்பங்களுக்கு முக்கிய காரணம் என்ற ஆராய்ச்சிக் கருத்தை வழங்கிய அமைச்சர் இவ்வித அபிவிருத்தி வேலைகள் வேகமுடன் தொடர முடியுமானால் தமிழ் மக்கள் சுபிட்சமடையவும் நாட்டில் ஒற்றுமை நிலவவும் முடியுமென நினைக்கின்றார்.

தேசிய ஒற்றுமையின் அடிப்படைக் கருத்து விசித்திரமானது; சிங்களப்பாடப் புத்தகங்கள் வஞ்சகமற்ற பிஞ்சு உள்ளங்களுக்கு விளக்கம் கொடுக்கின்றன; இந்த நாடு சிங்கள மக்களுக்கே! மற்றைய இனத்தவர்கள் அவர்களுடன் ஒற்றுமையாக வாழ வேண்டும்! கே. கே. எஸ். சீமெந்தால் இந்த ஒற்றுமையைச் சீர் செய்ய முடியுமா?

## விழுப்பொருளல்ல; வீண்பொருள்!

மாவத்தகமையில் கடந்தசனிக்கிழமை விழுந்த எரிபொருள் விண்ணில் இருந்து வீழ்ந்ததுதான் என்று உறுதி செய்யப்பட்டிருக்கிறது.

அப்பொருள் ''கொஸ்மஸ் 1402'' இன் ஒரு பகுதி இல்லை என்பது உடனடியாக ஊர்ஜிதப்படுத்தப் படாவிட்டாலும் இன்றளவில் அது விண் பொருளானாலும் வீண் பொருளே!

விண்ணகத்தில் வாழும் தேவர்களும் அடைய முடியா 'விழுப்பொருள்' மண்ணகத்தே வந்து மக்களை வாழச் செய்யும் காலம் ஒன்றிருந்தது; அது சடுதியாக முடிவடைந்துவிடவில்லை.

ஆனால் இன்று விண்வெளியைக் 'குத்தகையாக எடுத்திருக்கும் உலகின்' வல்லரசுகள் மண்ணகத்தில் நடத்தும் விளையாட்டுப் போட்டியை விண்வெளியிலும் கொண்டுசென்றிருக்கிறார்கள்; அதுதான் இன்றைய அபாயநிலை.

சோவியத் செய்மதியான 'கொஸ்மஸ் 1402' விண்வெளியில் பழுதடைந்து பூமியை நோக்கி வீழ்ந்து கொண்டிருக்கிறதென்று அதன் அபாயத்தை விபரீத செய்திகள் அகில உலகையுமே நடுங்க வைத்தன.

இலங்கையிலும் ஒருபகுதி விழலாமென்ற அச்சம்பரவியிருந்த காலத்தில் மாவத்தகமைச் சம்பவம் இடம் பெற்றது. இதனைப் பரிசோதிக்கும் விஞ்ஞான ஆற்றல் மண்ணுலகிலேயேஇருப்பது அரிது போல் தெரிகின்றது.

விண்ணிலிருந்து விழும் பொருள் விழுப்பொருளோ அல்லது வீண் பொருளோ என்று இனம் பார்க்கும் உள்ளுணர்வு இவ்வுலகில் அருகி வருவதற்கு விஞ்ஞான வளர்ச்சியை துஷ்பிரயோகம் செய்யும் அஞ்ஞான சக்திகள் பொறுப்பேற்க வேண்டும்.

## 'இன்றைய அரசியல் நிலை'

(பண்டத்தரிப்பு)

மாதகல் தமிழர் விடுதலைக் கூட்டணிக் கிளையின் புனரமைப்புப் பொதுக் கூட்டம் எதிர்வரும் 30ம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் மாதகல் புனித செபஸ்தியார் ஆலயத்திற்கு அண்மையில் நடைபெறவுள்ளது. தமிழர் விடுதலைக் கூட்டணி செயலதிபரானதிரு. அ. அமிர்தலிங்கம் 'இன்றைய அரசியல் நிலை' பற்றி உரை நிகழ்த்துவார். (க)

# "மாவட்டசபை கூட்டமா; முந்திரிகை கருத்தரங்கா?"

## மட்டு. மாவட்டசபை கூட்டத்தில் கேள்வி

(மட்டக்களப்பு நிருபர் இரா. துரைரத்தினம்)

மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்தி சபைக் கூட்டத்தில் நேற்று முந்திரிகைக் கூட்டுத்தாபனத்தில் பணியாற்றும் நிபுணர் ஒருவர் முந்திரிகைச் செய்கை குறித்து அங்கத்தவர்களுக்கு பல விளக்கங்களை அளித்துக் கொண்டிருந்தார். அப்போது அங்கு எழுந்த டாக்டர் பரீத் மீரா லெப்பை, ''இதென்ன மாவட்டசபைக் கூட்டமா? அல்லது முந்திரிகைக் கருத்தரங்கா?'' என்று ஒழுங்குப் பிரச்னையைக் கிளப்பினர்.

வெளிநாடு சென்று முந்திரிகைச் செய்கையில் நிபுணத்துவம் பெற்ற திரு. பாலசிங்கம் ஒருமணி நேரமாக விளக்கிக் கொண்டிருந்தபோதே டாக்டர் பரீத் இந்த ஒழுங்குப்பிரச்னையைக் கிளப்பினர்.

''நல்ல விஷயம் தான்! ஆனால் மாவட்டசபைதான் இதனை விளக்கக்கிடைத்ததா? இன்று முந்திரிகைச் செய்கை! நாளை கொச்சிக்காய் பற்றி பேசலாம். இப்படியே மாவட்டசபை கருத்தரங்கு மன்றமாக மாறிவிடுமே!'' டாக்டர் பரீத் மீரா லெப்பை தலைவர் எஸ். சம்பந்தமூர்த்தியைப் பார்த்துக் கூறினர்.

இதனையடுத்து முந்திரிகை செய்கை பற்றிய விளக்கம் நிறுத்தப்பட்டது.

மாவட்ட சபை நேற்றைய கூட்ட நிகழ்ச்சி நிரலில் 'முந்திரிகை செய்கை உரையாடல்' என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

## சுகாதார அத்தியட்சகர் நடவடிக்கை எடுப்பாரா?

மக்களின் சுகாதார நலன்களைப் பாதுகாக்கும் வகையில் கிராமம் தோறும் உள்ள அரசினர் வைத்தியசாலைகளில் குழந்தைகளுக்கு போலியோ தடுப்பு ஊசி மருந்து ஏற்றப் படுகின்றது. இதே போல குழந்தைகளின் போசாக்கு உணவாக 'திரிபோசா' என்ற மா உணவும் வழங்கப்படுகின்றது சுகாதார இலாகா இதை சகல பகுதிகளிலும் உள்ள வைத்திய சாலைகளில் இதற்குரிய சுகாதார உத்தியோகஸ்தர்கள் மூலம் வழங்கி வருகின்றது. ஆனல் எல்லாப் பகுதிகளிலும் இவை சீராக வழங்கப்படுகின்றனவா அல்லது மோசடி செய்யப்படுகின்றனவா?

புத்தூர் அரசினர் வைத்தியசாலையின் எல்லைக்குட்பட்ட மக்களுக்கு இவை சீராக ஒழுங்காக கிடைப்பதில்லையென்று இப்பகுதியில் உள்ள தாய்மார்கள் கவலையடைந்துள்ளனர்.

புத்தூர் வைத்தியசாலையின் பகுதிகளான ஆவரங்கால், நவற்கிரி, புத்தூர்கலட்டி, வாதரவத்தை, புத்தூர் ஆகிய பகுதிகளில் உள்ள தாய்மார்கள் மேற்படி வைத்தியசாலைக்குச் சென்று குறித்த உதவிகள் கிடைக்காமல் ஏமாற்றம் அடைந்து திரும்புவதை காண முடிகிறது.

போலியோ ஊசி மருந்து ஏற்றுவதற்கு எப்போ செல்வது இதற்குரிய உத்தியோகஸ்தர்கள் எப்போ வருவார்கள் என்ற விபரம் இத்தாய்மாருக்குத் தெரிவதில்லை. காரணம் இது தொடர்பான அறிவித்தல் எதுவும் தாய்மாருக்கு வழங்கப்படுவதில்லை. இதற்குரிய கிழமையோ நாளோ தெரியாமல் தாய்மார் தடுமாறும் நிலையை இப்பகுதியில் காணமுடிகிறது. இதற்குரிய உத்தியோகஸ்தர்கள் இது பற்றி பாராமுகமாக நடந்து கொள்வதே இந்த நிலைக்கு காரணமாகத் தோன்றுகின்றது. இப்படி ஒழுங்கீனமாக முன்னறிவித்தல் எதுவுமின்றி இவர்கள் நடந்துகொள்வதால் தூரஇடங்களிலிருந்து வருபவர்கள் சமூகம் கொடுக்கமுடியாத நிலை ஏற்படுகின்றது. இதனால் யார் இலாபம் அடைகின்றார்கள் என்பது தெரியவில்லை. போலியோ ஊசி மருந்து ஏற்றல், திரிபோசா பால் உணவு வழங்குதல் இவை இப்பகுதியின் சகல குழந்தைகளுக்கும் கிடைக்க வழியேற்படுமா? அல்லது குழந்தை சார்பில் இந்த 'திரிபோசா'' பால்உணவு வேறு தவறான வழியில் விநியோகிக்கப்படுகின்றதா? என்பதை அறியவும் இவை உரிய முறையில் வழங்கப்படவும் சுகாதார அத்தியட்சகர் நடவடிக்கை எடுப்பாரா?

இ. மயில்வாகனம்
சாந்தை தோட்டம்,
ஆவரங்கால்,
புத்தூர்.

[மேற்படி விடயமாக வேறு பல இடங்களிலிருந்தும் இவ்வாறான புகார்கள் வருகின்றன அதிகாரிகள் இந்நிலைமையை சீர்செய்ய ஆவன செய்வார்கள் என எதிர்பார்க்கின்றோம்.)

—ஆர்

## சீனி விற்பனை: மானிப்பாய் பரிஷ் ப.நோ.கூ. ச. தலைவர் தரும்விளக்கம்

1983—1—22ந் திகதி 'ஈழநாடு' பத்திரிகையில் எமது கூட்டுறவுச் சங்கம் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியிலுள்ள வர்த்தகருக்குப் பெருமளவு சீனியை அதிக விலையில் விற்றது கண்டு பிடிக்கப்பட்டதாக வந்த செய்தி தொடர்பாக சில உண்மைகளைப் பொதுமக்களுக்கும் குறிப்பாக மானிப்பாய் பரிஸ் ப.நோ.கூ. சங்க எல்லைக்குள் வதியும் பாவனையாளருக்கும் தெளிவுபடுத்த வேண்டியது இயக்குநர்களாகிய எமது கடமையாகும்.

உணவுக்கட்டுப்பாட்டு ஆணையாளர் சென்ற வருடம் சீனி விநியோகத்தை நிற்பாட்டி 'உம்பிச்சி லிமிட்டெட்' ஸ்தாபனத்திற்கு இது கைமாறியது. பல விலைகளின் சீனி விநியோகத்தை எமது சங்கம் பெற்றுக் கொண்டது. இறுதியாக 5515·5கிலோ சீனியை, கிலோ ரூபா 12/07க்கு 30.12 82ல் பெறப்பட்டது. இச்சீனியில் கணிசமான தொகை தேங்கி நின்றது.

மேலும் கொழும்பிலிருந்து உணவு ஆணையாளர் திணைக்களத்தால் விநியோகிக்கப்பட்ட சீனி லொறிமூலம் தருவிக்கப்பட்டது. இது, சீனி கிலோ ரூபா 11/- லொறிக் கூலி -/18 சதம் அத்துடன் விற்பனைவரி (B. T. T.) -/24 சதம் எல்லாமாக ரூபா 11.42 முடிகிறது. அத்துடன் சங்கத்தில் பறியல் கூலி ஆகியவற்றையும் கணக்கிட்டே பார்க்கவேண்டும்.

மேலும் 1983.1-7ந் திகதி சங்கங்களுக்கு அறிவித்தல் கொடுக்கப்பட்டதாகவும், மேலும் தனியாருக்குச் சீனி விற்பனை செய்யவேண்டாமென்றும் சங்கக் கிளைகளுக்கு விநியோகிக்க வேண்டுமெனவும் இம்மாதம் 7ம் திகதியே கச்சேரியால் அறிவிக்கப்பட்டுள்ளதாக இருப்பது அறியக்கிடக்கின்றது.

ஆனல் எமது சங்கத்திற்கு, வலி தென்மேற்கு உதவி அரசாங்க அதிபரால் மாத்திரமே 1983.1.17ந் திகதி அறிவிக்கப்பட்டது. அக்கடிதத்தில்தான் ரூபா 12/-க்குவிற்பனைசெய்யும்படியும், தனிப்பட்ட வியாபாரிகளுக்கு விற்கவேண்டாமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. உடனடியாக இது அமுல்படுத்தப்பட்டுள்ளது.

எமது சங்கம் பல வருடங்களாக மொத்த வியாபாரத்தை தனக்குள்ள அதிகாரங்களின் கீழ் செய்து வந்ததென்பதையும் பொதுமக்கள் அறிந்து கொள்ளவேண்டும்.

நாம் மேற்கொண்ட வியாபாரத்தால் பாவனையாளர் எவ்விதத்திலும் பாதிக்கப்படவில்லை என்பதையும், எமது சங்கத்தில் போதுமான சீனி விநியோகத்திற்காக இருக்கின்றது என்பதையும் அறிவிக்க விரும்புகிறோம்.

எமது 23.1.1983ந் திகதிய இயக்குநர் சபையில் தீர்மானிக்கப்பட்ட விஷயங்களை யே பாவனையாளர்கள் கவனத்திற்குச் சமர்ப்பிக்கிறேன்.

சு. தர்மசீலன்
தலைவர்

மானிப்பாய் கோவில்பற்று
ப. நோ. கூ. சங்கம்

# மக்கள் கருத்து

## மக்களே நோயைத் தேடுகிறார்கள்

சுன்னாகம் புகையிரத நிலையத்திற்கும் மல்லாகம் புகையிரத நிலையத்திற்கும் இடையில் உள்ள தூரத்திற்குள் வசிக்கும் மக்கள் தாங்கள் தங்களுக்கே நோயைத் தேடிக்கொள்கிறார்கள்.

ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் வீட்டில் அகற்றும் கழிவுப் பொருட்களையும் குப்பை கூழங்களையும் இப்படிப் பலதரப்பட்ட எல்லாக் கழிவுப் பொருட்களையும் வீதி (புகையிரதப் பாதைக்கு அருகாமை) யிலே வீசிவிடுகிறார்கள்.

இதுமட்டுமல்லாமல் மக்களுக்கு நோயை எளிதில் பரப்பக்கூடிய வகையிலும் நடந்து கொள்கிறார்கள்.

சிறுவர்களானாலும்சரி, பெரியவர்கள்கூட வீதியிலே மலம் கழிக்கிறார்கள். இதை மக்கள் வழமையாக நடத்திக்கொண்டு வருகிறார்கள். மழை காலங்களில் அந்த இடத்திலிருந்து துர்நாற்றம் வீசும். வெள்ளம் பெருக்கெடுப்பதினால் வேறு ஊர் மக்களுக்கும் இந்த நோய் பரவுவதற்கு சாத்தியக்கூறு உண்டு.

இ. தாசன்,
சுன்னாகம்.

# அரச பதவி வெற்றிடங்கள்

### விலங்கு வைத்தியர்

இலங்கை தேசிய விலங்கின காட்சிச் சாலையில் விலங்கு வைத்தியருக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பதாரி 22 வயதிற்கும் 40 வயதிற்கும் உட்பட்டவராயும் பல்கலைக்கழக விலங்கு விஞ்ஞான பட்டம் அல்லது விலங்கியல், விலங்கு வளர்ப்பு போஷாக்கியல் என்பவற்றில் பட்ட பின்படிப்பும் அல்லது டிப்ளோமா பட்டமும் விலங்கு வைத்தியராக 5 வருட அனுபவமும் பெற்றிருக்க வேண்டும் விண்ணப்பம் அனுப்புவதற்கான கடைசித் திகதி வருகிற 01–02–83 ஆகும். விபரங்கட்கு 13-01-83 வர்த்தமானி பார்க்கவும்.

### தீயணைப்பு படைஉத்தியோகத்தர்

தீயணைப்புப் படையில் நிலையஉத்தியோகத்தர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பதாரி 25–40 வயதிற்கு இடைப்பட்டவராக இருக்க வேண்டும். அத்துடன் ஆங்கில மொழியுடன் சி. பா. த. பரீட்சையில் சித்தி அல்லது ஆங்கில மொழியுடன் இரண்டு தடவைகளில் 6 பாடங்களில் சித்தியும் தீயணைக்கும் படையில் 15 வருட அனுபவமும் தேவை விண்ணப்பக் கடைசித்திகதி வருகிற 31 – 01 – 83 ஆகும் விபரங்கட்கு 07–1– 83 வர்த்தமானி பார்க்கவும்.

★ கொக்குவிலில் நடந்த திருமணம்

# ஓமம் வளர்த்து, தாலி கட்டினார் ஹோலந்து இளைஞர்!

[மட்டுவில்]

ஓமம் வளர்த்துத், தாலி கட்டி, அம்மி மிதித்து அருந்ததி பார்த்து, சைவத் தமிழ் குடும்பத்தில் திருமணம் நடந்தால் அதில் ஆச்சரியப்படுவதற்கொன்றுமில்லை! ஆனால், ஹோலந்து நாட்டைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் மணமகனாக இருந்து இந்தச் சம்பிரதாயங்களோடு திருமணம் செய்து கொண்டதுதான் ஆச்சரியத்தைத் தருகிறது!

திரு பிரான்ட் பிரான்ஸிஸ் 28 வயது இளைஞர்: கப்பல் மாலுமியாகப் பணியாற்றுகிறார்.

கொக்குவிலில் இவரது திருமணம் சைவ முறைப்படி, நடந்தது! 25 வயதான கொக்குவிலைச் சேர்ந்த பவானி நாபி இராசையாவே மணமகள்.

மணமகன் பிரான்ஸிஸ்தமது திருமணத்தைப் பற்றி கூறுகிறார்:—

''நான் கப்பல் மூலம் உலக நாடுகள் பலவற்றிற்குச் சென்றிருந்தேன். அமெரிக்கா, லண்டன், டுபாய், இந்தியா, இலங்கை உட்பட உலக நாடெங்கும் தமிழர் பரந்து வாழ்கிறார்கள். இதில் முக்கியமாக சைவ சமயத்தவர்கள் தமிழன் என்ற தனிச் சிறப்புடன் தாம் சென்ற நாடுகள் எல்லாம், தமது கலை, கலாசாரப் பண்புகளை விட்டுக் கொடுக்காமல், பூவுடனும், பொட்டுடனும் தனித்துவமாக வாழ்கிறார்கள்! அத்துடன் சைவ சமயத்தின் அடிப்படைக் கருத்துகளும் எனக்கு மிகவும் பிடித்துள்ளன.

இதன் காரணமாக நான் இந்தியா அல்லது இலங்கையில் ஒரு சைவப் பெண்ணை மணந்து, ஒரு சைவனாக மாற வேண்டும் என்று நீண்ட காலமாக விரும்பினேன். இதற்காக தமிழ் எழுதப் படிக்கப் பயிற்சி பெற்று வந்தேன். இன்று எழுத படிக்க, பேசக் கூடிய நிலைக்கு வந்து விட்டேன். இலங்கைக்கு வந்ததும் கல்வயலைச் சேர்ந்த திரு எஸ். ஸ்ரீனிவாசனின் நட்பு எனக்குக் கிடைத்தது ஒரு சுத்த சைவப் பெண்ணைபேசி ஒழுங்கு செய்து நான் அவரை முறைப்படி திருமணம் செய்துகொண்டேன்.

''இதன் காரணமாக ஹோலந்து எனது தாய்நாடு, இலங்கையாழ்ப்பாணம் கொக்குவில் எனது புகுந்த வீடு. நான் ஹொலன் பிரமுகரான திரு பிரான்ட் என்பவரின் ஒரே மகன். எனக்கு வேறு சகோதரர்கள் கிடையாது. எனது தயாரும் இறந்துவிட்டார். தந்தையார் மறுமணம் செய்து கொண்டார். நான் எனது தந்தையின்விருப்பத்தையும் பெற்றே இத்திருமணத்தைச் செய்கிறேன். எனது தந்தையார் எனது திருமண வைபவத்தை நேரில் காண முடியாது விட்டாலும், வைபவத்தைப் படமாக எடுத்துச் செல்கிறேன். அவர் அங்கு இக் கல்யாணக் காட்சியைக் கண்டு களிப்பார்.

''நானும் எனது மனைவியும் ஹோலந்து சென்றாலும் அடிக்கடி, மனைவியின் ஊருக்குவந்து செல்வோம்''.

## வரப் பெற்றோம்

### ஊற்று

இரு மாத வெளியீடு

யாழ். திருநெல்வேலி ஊற்று நிறுவகத்தின் 1982, ஆடி–புரட்டாதி வெளியீடான 'ஊற்று' சஞ்சிகை கிடைக்கப்பெற்றோம்,

எட்டு கட்டுரைகளும், விஞ்ஞான செய்தித்துணுக்குகளும் பிரசுரமாகியுள்ளன. 'இலங்கையின் உல்லாசப் பயணத்துறை', 'மனித இனங்கள்', 'மனித உடலும் தொழிற்பாடும்' என்னும் மூன்றும் தொடர் கட்டுரைகளாகும்.

'பாரதியாரின் கனவை நனவாக்கியவர்கள்' என்னும் தலைப்பில் தமிழ் உலகினுக்கு உலகப்புகழைத் தேடித்தந்த இலங்கைத் தமிழ் பெருமக்களான சேர். முத்துக்குமாரசாமி, கலாயோகி ஆனந்த குமாரசாமி, ஆங்கிலக் கவிஞர் தம்பி முத்து, விஞ்ஞானி பேராசிரியர் முத்தையா சுந்தரலிங்கம் ஆகியோரின் சாதனைகளைத் திரட்டித்தந்துள்ள கட்டுரை சிறந்த ஆக்கப்பணியாகும். இதனை ஐ. அமெரிக்காவின் இலினோய் பல்கலைக் கழகத்தில் கடமைபுரியும் இலங்கையரான திரு. சச்சி ஸ்ரீகாந்தா எழுதியுள்ளார்.

பல்லில்லா கியர்கள், கண் பெரிதாக்கும் ஊசி, தாய்ப்பால் ஊட்டலும்– கருத்தடையும் ஆகிய விஞ்ஞான செய்தித் துணுக்குகள் இதில் பிரசுரமாகியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

நூல்: 'தேடி வந்த தீரன்'
[யோசவ் வாஸ் நாடகம்– யாழ்ப்பாணப் படலம்]
ஆக்கியவர்: வண. பிதா. ம. பாவிலுப்பிள்ளை.

யாழ்ப்பாணக் குடாநாட்டினைத் தேடிவந்தது ஒல்லாந்தரின் ஆட்சிக்காலத்தல் கத்தோலிக்க திருமறைக்காக தேவஊழியம் செய்த புனிதர் யோசவ் வாஸ் முனிவரின் தேவஊழியத்தினை விளக்கும் நாடக நூலாக இந் நூல் அமைந்துள்ளது.

நூல் ஆசிரியர் எளிமையான அழகு தமிழில் இயல்பாகவே வாசகர்களை நாடகம் நிகழ்வுற்ற காலத்துக்கு அழைத்துச்சென்று, அக்காலச் சூழல்களையும், புனிதரின் தொண்டுகளையும் நயமாகத் தெளிவு பெறச்செய்கின்றார்.

புனிதரின் ஊழியத்தளங்களையும் சாதனைகளையும் நன்கு படம்பிடித்துக் காண்பித்துள்ளமை ஆசிரியரின் சிறப்பான ஆக்கமாகும்.

### 'அன்பு'

கலை–இலக்கிய மாதக்கையெழுத்துச்சஞ்சிகை

ஆசிரியர்: 'தமிழ்ச்செல்வன்'

இலங்கையின் தமிழ்ச்சஞ்சிகை வெளியீட்டில் 'மல்லிகை', 'சிரித்திரன்' சஞ்சிகைகள் சாதனை படைத்தது போன்று யாழ். குடாநாட்டிலிருந்து வெளிவரும் 'அன்பு' கலை–இலக்கிய மாதக் கையெழுத்துச் சஞ்சிகைக்கும் தனித்துவம் உண்டு.

'அன்பு' 'தமிழ்ச் செல்வனை' எஸ். கே. துரைசிங்கத்தை ஆசிரியராகக்கொண்டு அன்பகம், கைதடியிலிருந்து தொடர்ந்து கடந்த 5 ஆண்டுகளாக வெளிவருவது ஒரு சாதனையே ஆகும். கடந்த ஆண்டு ஐப்பசி வெளியீடு பாரதி நூற்றாண்டு விழாச்சிறப்பு மலராக 72 பக்கங்களில் வெளிவந்தமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

இளைய தலைமுறையினைச் சேர்ந்த புதிய படைப்பாளிகளின் ஆக்கங்களை; மாதந்தோறும் சிறுகதை, கவிதை, முதுமொழிகள், கேலித்துணுக்குகள் உட்பட பல சன ரஞ்சகமான விடயங்களைத் தாங்கி வருகிறது.

கடந்தாண்டு கார்த்திகை மாத 'அன்பு' வெளியீடு தரமான, கவிதை முத்துக்களுடனும் சிறந்த சிறுகதைகளுடனும் வெளிவந்துள்ளது.

எஸ். கே. ஏ. ஆனந்தன்

நூல்; நடராஜ ஸ்நபனம் ஸ்தோத்திரங்கள்
தொகுத்தவர்: கி. சுப்பிரமணிய சாஸ்திரிகள் அதிபர் சிவானந்த குருகுலம்.
வெளியிடுபவர்: திரு. பே. சுப்பிரமணியசெட்டியார் நீராவியடி, யாழ்ப்பாணம்.

ஸ்ரீநடேசஸ்நபனம் என்னும் இச்சிறிய நூல் ஆகமசாரமாக விளங்கும் சிவதத்துவ நிதி முதலான கிரந்தங்களிலிருந்து தொகுக்கப்பட்டுள்ளது. இதில் ஆனந்த தாண்டவ, உமா தாண்டவ, கௌரீ தாண்டவ, சந்தியா தாண்டவ, காளிகா தாண்டவ, திரிபுர தாண்டவ, சம்ஹார தாண்டவ ஆகிய ஏழு தாண்டவ மூர்த்தங்களுடன் எட்டாவதாக கனகசபாபதியுமாக எட்டு மூர்த்திகளையும் இரண்டாவது ஆவரணமாக அமைத்துச் சிறந்த யுக்தியுடன் தொகுக்கப்பட்டுள்ளது.

இதில் மூஷிகம், விருஷபம், சிம்மம், மயூரம், கருடன், கஜம், ஸ்வானம் ஆகியவற்றின் நவகுண்ட ஸ்பர்சாகுதி சுருக்கமானமுறையில் தொகுக்கப்பட்டுள்ளது. 30–ம் பக்கத்திலிருந்து மூன்றுமூன்று பாகங்களாக பன்னிரண்டு தேவதைகளின் முப்பத்தாறு சுலோகங்களும் கடைசியாக விநாயகர் முதல் சண்டேசன் ஈறாக மங்கள சுலோகங்களும் உள்ளன.

இது கும்பகோணம் ஸ்ரீவித்யா, பிரஸ், தமிழ்நாடு என்னுமிடத்தில் அழகாகக் கிரந்தலிபியில் அச்சிட்டு திருவாளர் ச. பேரம்பலம் நினைவுமலராக வெளியிடப்படுகின்றது.

இதைத் தொகுத்தவரின் சிரமங்களை நாமெல்லோரும் உணர்ந்துகொண்டு இதுபோல் இன்னும் பல அரிய விஷயங்கள் கொண்ட புஸ்தகங்களை வரவேற்கிறோம்.

கு. வைத்தீஸ்வரக்குருக்கள்

நூல்: திருக்குறளும் விவிலியமும் பகுதி II
ஆசிரியர்: ம. பாவிலுப்பிள்ளை மா–ம–தி–
விலை: ரூபா 5/–
நூல் கிடைக்குமிடம்: புனித கத்தோலிக்க அச்சகம், யாழ்ப்பாணம்.
கத்தோலிக்கப் புத்தகசாலை, கொழும்பு–11

திருக்குறளின் கொள்கைகளை எடுத்துக்காட்டி கிறீஸ்தவ வேதமாகிய விவிலிய நூலிலுள்ள கருத்துக்களை ஒப்பிட்டுக்காட்டியுள்ளது இந்நூல். திருக்குறளிலும் விவிலிய நூலிலுமே பெருமதிப்பு உண்டாகச் செய்யும் பண்புடையதாக இந்நூல் அமைந்துள்ளது.

திருக்குறள் படித்தவர்களுக்குப் பயன்படத்தக்கதாகவும் திருக்குறளைப் படிக்காதவர்கள் படிக்கத்தக்கதாகவும் திருக்குளுரை அமைந்திருக்கின்றது.

'குடும்பத்தின் பொருள் மனைமாட்சி, இதில்...வாழ்வின் இயக்கமான அன்பு அழகு, சுகம், செல்வம், சுற்றம் யாவும் அடங்கும். அதன் நிறைவே மக்கட்பேறு. இது; அவ்வாழ்வு குறையாது தொடரவும் வளரவும் ஏதுவாதலால் அழகுக்கு அழகுசெய்யும் அணிகலம் போன்றது' என வாழ்க்கைத்துணை நலம் என்னும் திருக்குறட் பகுதிபற்றி நுணுக்கமாகவும் தெளிவாகவும் இந்நூல் கூறுகின்றது.

திருக்குறளுக்குப் பொருத்தமான விவிலியப் பகுதிகள் விவிலிய நூலின் தன்மை– அமைப்பு – சிறப்பு என்பன பற்றி அறியவும் மகிழவும் உதவுகின்றது. இந்நூலின் அனுபந்தம் போன்று அமைந்துள்ள மனிதக்குடும்பம் என்னும் கட்டுரையிலுள்ள பின் வரும் பகுதியிலிருந்து இந்நூலின் சிறப்பை ஊகிக்கலாம்

''பகுத்தறிவைப் பாவிக்கப் பால வயதிலேயே பழகவேண்டும். இன்றைய பெற்றோர் பலர் குழந்தைகளை இன்பப் பொம்மைகளாகப் பாவிக்கின்றனர்–கட்டுப்பாடின்றி வளர்க்கின்றனர். உள்ளதெல்லாம் தனது. விரும்பியபடியெல்லாம் விருதாவாகலாம். என்று எண்ணும் சிறுவன் (எண்ணும்படி வளர்க்கப்படும் சிறுவன் சுயநலமியாவது சகசம். பொருளைப் பொறுப்புணர்ச்சியோடு பாவிக்கப்பழகவேண்டும். அது கட்டுப்பாடு, கடமை செய்து உரிமைபெறல் மனிதப்பண்பு.

-அருளாளன்

காலி மாவட்டத்தில்

# தென்னைச் செய்கைக்கு ரூ. 7 லட்சம் உதவிப்பணம்

(காலி)

காலி மாவட்டத்தில் தென்னைச் செய்கைக்காக கடந்த வருடம் தென்னை அபிவிருத்திச்சபை ஏழு இலட்சத்து முப்பத்தையாயிரம் ரூபாவை பகிர்ந்தளித்துள்ளது. இந்தப் பணம் தென்னை அபிவிருத்திச் செய் கையிலீடுபடுவோருக்கு ஊக்குவிப்பு உதவிப்பணமாகவே அளிக்கப்பட்டது.

இதைத்தவிர தென்னந் தோட்டங்களில் உப பயிர்ச் செய்கைக்காக 16,000 ரூபாவும், வீட்டுத் தோட்டத்துக்காக 47,00 ரூபாவும் உதவிப் பணமாக பகிர்ந்தளிக்கப் பட்டிருப்பதாக தென்னை அபிவிருத்திசபை காலிப்பகுதி முகாமையாளர் திரு ரி. ஜி. ரூபர்ட் தெரிவித்தார்.

# முத்துக்குமாரசுவாமிக்கு லண்டனில் அஞ்சலி

(யாழ்ப்பாணம்)

எழுத்தாளரும், ஆராய்ச்சியாளருமான மறைந்த இலங்கைத் தமிழ் அறிஞர் திரு. வி. முத்துக்குமாரசுவாமி அவர்களின் நினைவஞ்சலிக் கூட்டம் லண்டனிலுள்ள விம்பிள்டன் நகரில் நடைபெற்றது.

விசேட பூசையுடன் நடைபெற்ற இக்கூட்டம் விம்பிள்டன் தமிழ் மண்டபத்தில் கடந்த டிசம்பர் 31–ம் திகதி மாலை ஏழு மணிக்கு ஆரம்பமானது.

லண்டனிலிருந்து வெளியாகும் சஞ்சிகையான ''லண்டன் முரசு'' வின் அனுசரணையுடன் நடைபெற்ற இந்த அஞ்சலிக் கூட்டத்தில் பெருமளவு தமிழ் அனுதாபிகள் கலந்து கொண்டனர்.

லண்டனிலுள்ள தமிழ்ச் சங்கத்தினது தலைவர் திரு. எம். பி. செல்வநாயகம், முன்னாள் தலைவர் திரு. வி. சங்கரலிங்கம், கலாநிதி கே. ஆறுமுகம், உட்படப் பல பிரமுகர்கள் அஞ்சலி உரைகள் நிகழ்த்தினர். திரு. சபாபதிப் பிள்ளை சதானந்தன் அஞ்சலி விழா ஏற்பாடுகளைச் செய் திருந்தார்.

இக்கூட்டம் இறுதியில் விசேட வழிபாட்டு நிகழ்ச்சியுடன், பிரசாதங்களும், வழங்கப்பட்டன. (இ)

## யாருடைய தோடு?

யாழ்ப்பாணம் விம்ஸ் உரிமையாளர் திரு. க. விமலேந்திரன் யாழ்ப்பாணம் பிரதான வீதியில் உள்ள கடைவாசல் ஒன்றிலிருந்து ஒரு சோடி தோட்டினை கண்டெடுத்து 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைத்துள்ளார். உரியவர் தகுந்த அத்தாட்சி காட்டி காரியாலய நேரத்தில் பெற்றுக் கொள்ளவும்.

## ''நடவடிக்கை மேற்கொள்க''

(மன்னார்)

மன்னார் – வங்காலை தென் கடலில் சிலர் தினமும் சட்ட விரோதமாக டைனமெட் வெடி வைத்து மீன்பிடிப்பதைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை உடன் மேற்கொள்ளவும்.

இவ்வாறு கூறும் மகஜர் ஒன்றினை வங்காலை கடல்தொழில் விரிவாக்க சேவை சங்கத்தலை

(8ம் பக்கம் பார்க்க)

# கிளிநொச்சிச் செய்திகள்

(கிளிநொச்சி)

தீவுப்பகுதிக்கான பஸ் நிலையத்தை பண்ணைக்கு இடமாற்றம் செய்வதற்கு மேற்கொள்ளப்பட்டுவரும் நடவடிக்கைக்கு கிளிநொச்சித் தொகுதியில் உள்ள பல ஆயிரக்கணக்கான தீவுப்பகுதி மக்களும் அவர்கள் சார்ந்துள்ள பொது ஸ்தாபனங்களும் பலத்த கண்டனம் தெரிவித்துள்ளன.

கிளிநொச்சிப் பிரதேச சபைத் தலைவரும் அனலைதீவைச் சேர்ந்தவருமான திரு. என். சுப்பிரமணியம், பரந்தன் கிளிநொச்சி ரோட்டறிக் கழகத் தலைவரும், புங்குடுதீவைச் சேர்ந்தவருமான திரு. ஆ. குலசேகரம்பிள்ளை, கிளிநொச்சி கலைஇலக்கிய வட்டத் தலைவரும் வேலணையைச் சேர்ந்தவருமான டாக்டர் கே. வி. கே. திருலோகமூர்த்தி ஆகியோரும் தீவுப்பகுதி பஸ்நிலையம் பண்ணைக்கு இடமாற்றம் பெற எடுக்கப்படும் முயற்சிக்கு வன்மையான கண்டனத்தைத் தெரிவித்துள்ளனர். மூட்டை முடிச்சுக்களுடன் கடல்கடந்து பலவேறு பிரயாணக் கஷ்டங்களையும் அனுபவித்துவிட்டு யாழ். நகரை அடையும் மக்களை இரண்டு பஸ்தரிப்பு நிலையத்திற்கும்இடையில் மூட்டை முடிச்சுக்களையும் காவிக் கொண்டு செல்லவைப்பது மனிதாபிமானமற்ற செயல் என்று இவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

## தேர்தல் வெற்றிக் கொண்டாட்டம்

கிளிநொச்சியில் ஜனாதிபதி தேர்தலிலும் சர்வஜன வாக்கெடுப்பிலும் அரசு வெற்றி பெற்றதைக் கொண்டாடும் வைபவம் ஒன்று நடைபெற்றது.

ஜெயந்திநகரில் நடைபெற்ற இவ்வைபவத்தில் கிளிநொச்சித் தொகுதி ஐக்கிய தேசியக் கட்சி அமைப்பாளர் திரு. நாயகம் சிற்றம்பலம் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்டார். கிளிநொச்சித் தொகுதியில் உள்ள சகல ஐ. தே. கட்சிக் கிளை நிர்வாகிகளும் ஆதரவாளரும் கலந்துகொண்டனர். ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்த்தனவின் உருவப்படத்தை திரு. நாயகம் திரைநீக்கம் செய்துவைத்து உரையாற்றினார்.

''இன்றைய அரசு அபிவிருத்திப் பணிகளுக்கே முக்கியஇடம் அளிக்கிறது. இச்சந்தர்ப்பத்தை நல்லமுறையில் கிளிநொச்சி மக்கள் பயன்படுத்திக்கொள்ளவேண்டும்' என்று கூறிய அவர் இப்பகுதியில் வேலையற்றிருக்கும் இளைஞர், யுவதிகளுக்கு வேலைவாய்ப்பளிப்பது சம்பந்தமாக ஜனாதிபதியுடனும் அமைச்சர்களுடனும் தாம் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளதாகவும் தகுதி அடிப்படையிலும் நியாயமானமுறையிலும் இந்நியமனங்களை வழங்க ஒழுங்குகள் மேற்கொள்ளப்படுமென்றும், இளைஞர்கள் அரசின் உதவிகளை மட்டும் பூரணமாக நம்பியிராமல் சுயமுயற்சியிலும் ஈடுபடவேண்டும் என்றும் தெரிவித்தார்.

ஐ. தே. க. கிளிநொச்சி பிரச்சார அலுவலர் திரு. ஜி. ஏ. பதமநாதன், திரு. சு.பாலசுந்தரம் உட்பட வேறுபலரும் உரையாற்றினர்கள்.

## ஒருவருக்குச் சிறை மற்றவருக்குப் பிடிவிருந்து

பெற்றோலியம் கூட்டுத்தாபனத்தில் எரிபொருள் திருடிய நபர் ஒருவருக்குக் கிளிநொச்சி நீதவான் திரு. ரி. ஜோகநாதன் ஒன்பது மாதக் கடூழியச் சிறைத்தண்டனை விதித்தார்.

1982ம் ஆண்டு ஜூலை 20-ம் திகதி கிளிநொச்சியில் உள்ள பெற்றோலியம் கூட்டுத்தாபனத்தில் 870 ரூபா 03சதம் பெறுமதியான எரிபொருளைத் திருடியதாகக் களனியைச் சேர்ந்த நோவ தேவகே பிரேமரத்தின, மற்றும் அதே இடத்தைச் சேர்ந்த கல்தேரா என்பவருக்கெதிராகக் கிளிநொச்சிப் பொலிசாரால் தொடரப்பட்ட வழக்கு கிளிநொச்சி நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

விசாரணை நடுவில் முதலாம் எதிரியான பிரேமரத்ன குற்றத்தை ஒப்புக் கொண்டார். இவ்வழக்கின் இரு எதிரிகளும் முன்னர் மூன்று தடவைகள் இதுபோன்ற திருட்டுக் குற்றங்களில் ஈடுபட்டுக் கடூழியச் சிறைத்தண்டனை பெற்றவர்களெனப் பொலிசார் நீதவானின் கவனத்திற்குக்கொண்டு வந்தனர். இதைத் தொடர்ந்து எதிரியின் கைவிரலடையாளம் எடுக்கப்பட்டபின் நீதவான் திரு. ரி. ஜோகநாதன் இவ்வழக்கின் முதலாம் எதிரியான பிரேமரத்னவுக்கு ஒன்பது மாதக் கடூழியச் சிறைத் தண்டனை வழங்கித் தீர்ப்பளித்தார்.

இரண்டாம் எதிரியான கல்தேரா நீதிமன்றத்திற்குச் சமூகம் கொடுக்காததால் பகிரங்க பிடி ஆணை பிறப்பிக்கப்பட்டது. இவ் எதிரி முன்னர் 2,500 ரூபா பிணையில் விடப்பட்டிருந்தார். இவருக்குப் பிணை நின்ற நபருக்கும் பிடி ஆணை பிறப்பிக்கப்பட்டது.

பொலிஸ் தரப்பில் நீதிமன்ற சார்ஜண்டுகளான இ. திருவிளங்கமும், எம். சாந்தகுமாரும் வழக்கை நடத்தினார்கள். எதிரிகள் சார்பில் சட்டத்தரணிகள் பொன். வெற்றிவேலுவும், அசோகநாதனும் ஆஜராகியிருந்தனர்.

## உலக்கையால் தாக்கப்பட்டனராம்

காணித்தகராறு காரணமாக உலக்கையால் தாக்கப்பட்ட இளைஞர் ஒருவர் தலையில் பலத்த காயங்களுடன் கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பூநகரி கிராஞ்சியில் வசிக்கும் சின்னத்தம்பி ஜெகதீஸ்வரன் என்னும் 31 வயது இளைஞரே உலக்கையால் தாக்கப்பட்டுப் படுகாயம் அடைந்தவராவார்.

இத்தாக்குதல் தொடர்பாக கிராஞ்சியைச் சேர்ந்த சந்தேக நபரான செல்லப்பா செல்லமோகன் என்பவரைக் கிளிநொச்சிப் பொலிசார் விசாரணை செய்து வருகின்றனர்.

● ● ●

கண்டாவளை பிரதான வீதி சிரமதானம் மூலம் திருத்தி அமைக்கப்பட்டது. கிராம முன்னேற்றச் சங்கச் செயலாளரும், கிளிநொச்சி கலை இலக்கிய வட்ட உப-தலைவரும், சமூகசேவையாளருமான திரு. வே. கந்தசாமி தலைமையில் இருபத்தைந்து இளைஞர்கள் இச் சிரமதானத்தில் ஈடுபட்டனர். கண்டாவளைக் கிராமோதய சபைத் தலைவரும், அதிபருமான திரு. தர்மரத்தினம் சிரமதானத்தை ஆரம்பித்து வைத்தார்.

## கலாசாரப் பேரவை

கிளிநொச்சி கலாசாரப் பேரவையின் தலைவராக முன்னாள் பட்டின சபை உப தலைவரும், சமூக சேவையாளருமான திரு. இ. கிருஷ்ணராசா தெரிவு செய்யப்பட்டுள்ளார். அமைப்பாளர்களாக ஆசிரியர் சச்சி. முருகேசுவும், சட்டத்தரணி எஸ். விக்னேஸ்வரன், கலைஞர் எஸ் எஸ். அச்சுதன் பிள்ளை, க. பொன்னம்பலம், அதிபர் தர்மரத்தினம் ஆகியோரும் தெரிவானார்கள். 25 பேர் கொண்ட பேராளர் குழுவும் தெரிவு செய்யப்பட்டது.

## பொது விவகாரங்கள் தொடர்பான அதிகாரி



(கொழும்பு)

கொழும்பிலுள்ள அமெரிக்க தகவல் பணி பிரிவின் பொது விவகாரங்கள் தொடர்பான அதிகாரியாக திரு. றெனல்ட் பிரைஸ் ஒப்பன் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் சமீபகாலத்தில் அமெரிக்க தகவல் சேவைப் பிரிவின் பரிசோதகராக பத்து நாடுகளுக்கு விஜயம் மேற்கொண்டிருந்தார் அதற்கு முன்னர் வாஸிங்டனிலுள்ள அமெரிக்க தகவல் நிலையத்தின் கிழக்காசிய பத்திரிகைத் துறைப்பிரிவின் தலைவராகப் பணியாற்றினர்.

## கோரிக்கை நிறைவேறுகிறது

(கரவெட்டி)

கரவெட்டி மத்தி பகுதி மக்களின் வசதி கருதி கரவெட்டி சாமியன் அரசடியில் தாற்பெட்டி ஒன்று நிறுவப்படவுள்ளது. கரவெட்டி மத்தி கிராம அபிவிருத்திச் சங்கம் தபால் தந்தித் தொடர்புகள் அமைச்சிடம் விடுத்த கோரிக்கையைத் தொடர்ந்தே இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## பாராட்டு உபசரணை

(புலோலி)

புதிய சமாதான நீதவானாக நியமனம் செய்யப்பட்ட தொழில் நுட்ப உத்தியோகத்தர் திரு. வீ. இராசதுரைக்குப் பண்ணை ஆஸ்பத்திரிப் பிரதேச ஆய்வுகூடத்தில் பாராட்டு நிகழ்ச்சி இடம் பெற்றது. ஆய்வுகூடப் பொறுப்பதிகாரி திரு. ஆர். கிருஷ்ணன் வைபவத்திற்குத் தலைமை வகித்தார்.

நுண்ணியலாளர் திரு. சபாரத்தினம், திரு. எஸ். சிவநேசன் திரு. எஸ். ஸ்ரீக்கண்ணன் திரு. எஸ். சற்குணம், திரு. ஜீ. எஸ். செல்வக்கந்தராசா, திரு. பஞ்சாட்சரம், திரு. கந்தையா ஆகியோர் பாராட்டுரைவழங்கினர்.

## மயானத்தில் சிரமதானம்

(கோண்டாவில்)

கொக்குவில் கணக்க மரத்தடி மயானம் சிரமதான முறையில் துப்பரவு செய்யப்பட்டது. அபிவிருத்திச் சபைத் தலைவர் திரு. பொ.சின்னத்துரை தலைமையில் சுமார் ஐம்பது பேர் இச் சிரமதானப் பணியில் ஈடுபட்டனர் இதில் பிரம்படி வாசிகசாலை உறுப்பினர்களும் பங்கு பற்றிக் கொண்டனர்.

(அ)

## கடல்...

(3ம் பக்கத் தொடர்ச்சி)

லும் இவை வேட்டையாடப் படுகின்றன.

இத்தகைய நிலைமையினாலேயே கடல் ஆமை இனம் அருகிவரும் நிலை தோன்றி, இந்த இனமே நாளடைவில் மறைந்துவிடும் அபாயம் காணப்படுகிறது! (கி)

## "பொதுமக்கள் ஒத்துழைப்பின்றிஅபிவிருத்தி வேலைகளைசெய்யமுடியாது"

- பரு. எம். பி.

[புலோலி]

'பொதுமக்களின் ஒத்துழைப்பின்றிக் கிராம மக்களின் அபிவிருத்தி வேலைகளை மேற்கொள்ளமுடியாது. கிராம மக்கள் தமது கிராமமுன்னேற்றத்திற்காக உழைப்பதுடன் தொழிற்துறைகளிலும் ஈடுபட்டுப் பொருளாதார மேம்பாட்டை ஏற்படுத்த முயல வேண்டும்.'

இவ்வாறு பருத்தித்துறை எம். பி, திரு. கே. துரைரத்தினம், புலோலி தெற்கு சிங்கைநகர் உதயசூரியன் முன்னேற்ற மன்ற சனசமூக நிலையப் பொங்கல் விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பேசுகையில் கூறினர்

இவ்விழா நிலையத் தலைவர் திரு. வீ. ஜீ. தங்கவேல் தலைமையில் நடைபெற்றது. பருத்தித்துறை எம். பி. திரு. துரைரத்தினம் தொடர்ந்து பேசுகையில் சொன்னதாவது:-

இக்கிராம மக்கள் இங்கு வீதி அமைப்பதற்காகத் தமது காணிகளை ஒதுக்கித்தந்ததால் நான் அவ்வீதிக்கான நிதியை ஒதுக்கீடுசெய்து உதவமுடிந்துள்ளது. இந்த முன்மாதிரியைப் பின்பற்றிப் பொதுமக்கள் என்னுடன் ஒத்துழைத்தால் பல்வேறு கிராம அபிவிருத்தி வேலைகளையும் மேற்கொள்ளமுடியும்.

இனிமேல் கிராமோதய சபைகளே இவ்வபிவிருத்தி வேலைகளைப் பொறுப்பேற்றுச் செய்யவுள்ளன, இதன்மூலம் கிராம மக்களே கிராமிய அபிவிருத்தியில் நேரடியாகப் பங்கு கொள்ளக்கூடிய சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளது.

இக்கிராமத்தில் கிடைக்கும் மூல வளங்களைப் பயன்படுத்தி முன்னேறவும், தொழில் துறைப் பயிற்சிகளைப் பெற்றுக் கொள்ளவும் கைத்தொழில் நிலையம் ஒன்றை நிறுவித்தர முயற்சிக்கின்றேன். நாம் ஒவ்வொருவரும் சிறு கைத்தொழிற்துறைகளிலும், விவசாயத்திலும் ஈடுபடவேண்டும். இதன்மூலமே இன்றைய வாழ்க்கைச் செலவு உயர்வைச் சமாளித்து வாழ்க்கையை நடத்தமுடியும்.



(வட்டுக்கோட்டை)

வட்டுக்கோட்டையைச் சேர்ந்த அமரர் ப. மு. சங்கரப்பிள்ளை சிறந்த சமூக சேவையாளராகவும், பண்பாளராகவும் திகழ்ந்தார். தம்மை நாடிவரும் மக்களை இன்முகத்துடன் வரவேற்று அவர்களின் பிரச்னைகளைத் தீர்த்து வைப்பதில் மிகவும் அக்கறை எடுத்து கொண்டவர்.

1952-ம் ஆண்டு தொடக்கம் கடைசிவரை மூளாய் கூட்டுறவு ஆஸ்பத்திரிச் சங்கத் தலைவராகப் பதவி வகித்த இவர் அவ்வைத்தியசாலையை ஆசியாவிலேயே சிறந்த வைத்திய சாலையாக மிளிரச் செய்தார். நடிகர் திலகம் சிவாஜி கணேசனை 1953 -ம் ஆண்டு மூளாய் ஆஸ்பத்திரிக்கு வரவழைத்து அவரைக் கௌரவித்தார். 1947 -ம் ஆண்டு தொடக்கம் இறக்கும் வரை அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் நிர்வாகசபை உறுப்பினராக விளங்கியதுடன் அக்கட்சியை ஸ்தாபிப்பதிலும் முன்னின்று உழைத்தார். யாழ்.ரோட்டரிக் கழகத்தின் தலைவராகப் பதவி வகித்த இவர் தனது பதவிக் காலத்திலே ஏழை எளிய மக்களின் நல்வாழ்வுக்காகப் பல திட்டங்களை வகுத்து செயல் படுத்தினர். இவரின் சேவைகளைப் பாராட்டி அரசாங்கம் 1952-ம் ஆண்டு சமாதான நீதவான் பட்டத்தையும் 1955-ம் ஆண்டு முதலியார் பட்டத்தையும் வழங்கிக் கௌரவித்தது அன்னாரின் பதினேந்தாவது நினைவுதினமான இன்று அவரின் ஆத்மா சாந்தி அடைவதாக.

--தி.வெற்றிவேலுப்பிள்ளை

## ஆலயத்தில் திருட்டு

[மாவிட்டபுரம்]

ஆலயத்தில் கைவரிசை காட்டிய திருட்டுப் பேர்வழிகள் அங்கிருந்த வெள்ளி வேலையும் திருடிச் சென்றுவிட்டனராம்! இளவாலை ஆனை விழுந்தான் பிள்ளையார் கோவிலில் இத்திருட்டுச் சம்பவம் நிகழ்ந்துள்ளது.

இது தொடர்பாக காங்கேசன்துறைப் பொலிசில் செய்துள்ள புகாரில் திருட்டுப் போன வெள்ளி வேலின் பெறுமதி 900ரூபா பெறுமதியானது என்று தெரிவிக்கப்பட்டது. பொலிசார் புலன் விசாரணை செய்து வருகின்றனர்.

## கிறிஸ்தவ ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு

[அரியாலை]

ரோமன் கத்தோலிக்கரல்லாத கிறிஸ்தவ ஆசிரியர்களுக்கான ஒரு வாரக் கருத்தரங்கு பண்டாரவளையில் எதிர் வரும் ஏப்ரல் மாத விடுமுறையில் நடைபெறவிருக்கிறது.

பிரதம வகுப்புக்களுக்கான கருத்தரங்கு ஏப்ரல் 17ம் திகதி தொடக்கம் 23ம் திகதி வரையும், இரண்டாந்தராதர வகுப்புகளுக்கான கருத்தரங்கு ஏப்ரல் 23ம் திகதி தொடக்கம் 29ம்திகதி வரையும் நடைபெறவிருக்கின்றன. இதற்கான ஏற்பாடுகளை இலங்கை கிறிஸ்தவ ஆசிரியர் சங்கச் செயலாளர் செல்வி மாலினி வீரசிங்க செய்துள்ளார்.

[அ]

## உலக உணவு ஸ்தாபனம் கோரிக்கை

லண்டன், ஜன 24

உணவுப் பண்டங்களைக் கையிருப்பில் சேமித்து வைக்க வேண்டுமென உலக உணவு விவசாய ஸ்தாபனம் நாடுகளை வலியுறுத்தி வருகின்றது.

இயற்கை அழிவு, யுத்த அழிவு, பயிர்ச் செய்கைப் பாதிப்பு என்பனவற்றின் போது சம்பந்தப்பட்ட நாடுகள் பெரும் உணவுத்தட்டுப்பாட்டை எதிர்நோக்கா திருக்கும் பொருட்டே உலக உணவு ஸ்தாபனம் மேற்கண்ட பிரசாரத்தை ஆரம்பித்துள்ளது.

ஐரோப்பிய பொருளாதார சமூக நாடுகளை உணவுப் பொருட்களைக் கையிருப்பில் சேமித்து வைக்கும்படி உலக உணவு ஸ்தாபனம் ஏற்கனவே கோரிக்கை விடுத்திருந்தது இதற்கு ஐ. பொ. ச. நாடுகள் ஒத்துழைப்பு வழங்கியிருந்தன.

வெஸ்லி (மானிப்பாய்)
தினசரி- 6-15, 9-15
சனி.ஞாயிறு 2-30
நானும் ஒரு பெண்

றீகல் [யாழ். நகர்]
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர்.-சரோஜாதேவி (இருவேடம்) - ரத்னா
எங்க வீட்டுப் பிள்ளை

சாந்தி 25-27 யாழ்.
தினசரி 4 காட்சிகள்
முத்துராமன்-ராஜஸ்ரீ
அனுபவம் புதுமை
(புதிய பிரதி)

கடைசி சிலதினங்கள்
ராஜா யாழ்.நகர்
தினசரி 4 காட்சிகள்
கார்த்திக்-ராதா - சுரேகா
மௌனகீதங்கள்
(ஈஸ்ட்மன் கலர்)
3-2-83 முதல்
சிவாஜி-சாவித்திரி
கர்ணன்
[ஈஸ்ட்மன் கலர்]

தென்னகத்தில் பல படங்களின் சாதனைகளை முறியடித்த ''பாரதிராஜா''வின் பொன்விழா சித்திரம்.
ஹரன் (யாழ். நகர்) தினசரி 4 காட்சிகள்
''நிறம் மாறு பூக்கள்,' புகழ்
✶ சுதாகர் ✶ ராதிகா நடித்த
கிழக்கே போகும் ரயில் (கலர்)

வெலிங்டன் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
ரஜீவ் - ஜோதி
ரயில் பயணங்களில்
(கலர்)

லிடோ (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
கமல்-ஸ்ரீதேவி
பதினாறு வயதினிலே

ஸ்ரீதர் (யாழ். நகர்) தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர்.
நம் நாடு

ராணி (யாழ். நகர்) தினசரி 10-30, 2-30, 6-00, 9-30
சிவாஜி - விஜயா - நம்பியார் நடித்த
ராமன் எத்தனை ராமனடி

மனோகரா
(யாழ்நகர்) தினசரி 10-30, 2-15, 4-45, 7-00 9-30p.m.
Weng Weng in
FOR YOUR HEIGHT ONLY
(Bond Film color)

வின்ஸர் தினசரி 4 காட்சிகள் (யாழ்நகர்)
4-வது HOUSE FULL வாரம்
அலைமோதும் பெண்கள்கூட்டம்
ஆனந் [சிவாஜி கணேசன்]
தன்னுடைய காதலிக்காக (வாணிஸ்ரீ)
கட்டிய மாளிகை
உங்கள் குடும்பத்துடன் விஜயம்செய்யுங்கள்
✶ சிவாஜி ✶ வாணிஸ்ரீ ✶ பாலாஜி ✶ நாகேஷ்
''வசந்தமாளிகை''
[கலர்]
(இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட புதிய பிரதி)

# இந்திய விமானப்படை யாழ். கோஷ்டியை (1-0) வென்றது!

[யாழ்ப்பாணம்]

யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் நடந்த உதைபந்தாட்டப் போட்டியில் இந்திய விமானப்படைத் தெரிவுக்கோஷ்டி, யாழ் தெரிவுக் கோஷ்டியைத் தோற்கடித்தது.

நேற்றுமுன்தினம் இந்த இரு கோஷ்டிகளுக்குமிடையில் நடைபெற்ற போட்டியில் இந்தியக் கோஷ்டி 1-0 கோல்களால் வெற்றிபெற்றது.

இப்போட்டி ஆரம்பமாகி பத்து நிமிடங்களின்பின், இந்தியக் கோஷ்டி 'கோணர்' உதைமூலம் கோல் போட்டது. இக்கோலை மேற்படி கோஷ்டியின் முன்னணி வீரர் எஸ் மதியழகன் போட்டார். இடைவேளையின்பின் யாழ். கோஷ்டி கோல்கள் போடும் பல சந்தர்ப்பங்களை நழுவிவிட்டது.

இப்போட்டியைப் பார்ப்பதற்கு ஆயிரக்கணக்கான ரசிகர்கள் வந்திருந்தபோதிலும், இரு கோஷ்டிகளின் ஆட்டமும் சிறப்பாக அமையவில்லை.

இப்போட்டி ஆரம்பமாவதற்குமுன் பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட இலங்கையின் முன்னாள் உதைபந்தாட்டப் பயிற்சியாளர் திரு. வி நடராசாவுக்கு யாழ். உதைபந்தாட்ட லீக்கின் தலைவர் டாக்டர் ஜே. பி. ஸி. பிலிப் இரு கோஷ்டி வீரர்களையும் அறிமுகம்செய்துவைத்தார்.

இப்போட்டிக்கு திரு. ஈ. கே. குமரையா மத்தியஸ்தம் வகித்தார்.

## நலன்புரிச் சங்க நிர்வாகிகள்

[புலோலி]

யாழ். மலேரியாத் தடைப் பகுதிப் பிராந்திய ஆய்வுகூட நலன்புரிச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் திரு. இ. கிருஷ்ணன் தலைமையில் நடைபெற்றது.

பின்வருவோர் புதிய நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

போஷகர்; டாக்டர் கே. எஸ். சிவகுரு (பிராந்திய வைத்திய அதிகாரி), தலைவர்: திரு. இ. கிருஷ்ணன், உப தலைவர் திரு சு. பத்மநாதன், செயலாளர் திரு. வே. கந்தையா, உப செயலாளர் திரு. கு. பஞ்சாட்சரம், பொருளாளர் திரு ச ஸ்ரீ கண்ணன், கணக்காய்வாளர்: திரு. செ. தியாகராசா.

செயற்குழு உறுப்பினர்கள் திரு ஐ சிறீரங்கன், திரு. சி. சிவநேசன்.

## இன்றைய பலன்

தை மாதம் 12-ந் திகதி
செவ்வாய்க்கிழமை
(25—1—83)

மேடம்: முன்னேற்றம் தடைப்படும். குறுக்கு வழித் தலையீடு குழப்பத்தை ஏற்படுத்தலாம். எதேச்சாதிகாரப் போக்கால் சிலரை பகைத்துக் கொள்ளவும் நேரிடும். அமைதி நன்று.

இடபம்: நம்பிக்கை மோசடி நடக்கும். வியாபாரத் துறையில் நஷ்டம் ஏற்படலாம். அதிக முதலீட்டைத் தவிர்த்துக்கொள்ளவும், சிலருக்கு வாத ரோகம் தென்படக் கூடும்.

மிதுனம்: பலகாலம் எதிர்பார்த்திருந்த பதவி உயர்வுக்கு வழிகோலப்படும், சிலருக்கு புதிதாகத் தொழில் கிடைக்கக்கூடும். வருவாயும் வளரும். பொன்னான தினம்.

கடகம்: சிந்தனை அலைமோதும், செய்தொழிலில் பதட்டநிலை தென்படும். அவசர முடிவின் மூலம் குறை கேட்க நேரிடும். பல வழிகளிலும் பணம் விரயமாகும்.

சிங்கம்: கனிவான நினைவலைகளில் இன்று ஆனந்தமாக மிதந்து செல்வீர்கள். கல்வித் துறையில் வித்துவத்தன்மை தென்படும். வாகனம் செலுத்துபவர்கள் மக்களின் ஆதரவைப் பெறுவர்.

கன்னி: வருமானத்தில் திருப்திகரமான நிலை தென்படும். புதிய முயற்சிகளிலும் ஈடுபடுவதற்கு விரும்புவீர்கள். புத்திரர் வழியால் புனிதமும் கிடைக்கும். புதுமையான எண்ணம் தலைதூக்கும்.

துலாம்: திகைக்க வைக்கும் சம்பவம் இன்று நடைபெறலாம். அரசினரின் ஆத்திரப் பார்வையும் உங்கள் பக்கம் திருப்ப முடியும். கோஷ்டிச் சண்டையில் மாட்டிக் கொள்ள நேரிடும்.

விருட்சிகம்: நீண்ட நாள் எதிர்பார்த்த நல்ல திருப்பம் இன்று ஏற்பட முடியும். குடும்ப விவகாரங்களில் பிணைப்புக்கள் இறுகும். காதல் உலகில் கனிவான சம்பவங்கள் இடம் பெறும்.

தனு: பிரச்னைகள் மேலும் உருவாகும். உணவு விடயத்தில் பிரியக்குறைவு தென்படும். கூர்மையான ஆயுதங்களுடன் பழகாதிருப்பது நன்று.

மகரம்: உயர்ந்த எண்ணங்கள் உங்களைப் புகழின் உச்சத்துக்கு அழைத்துச் செல்லும். தெய்வ வழிபாட்டில் அதிக ஆர்வம் பிறக்கும். கால்நடை விருத்திக்கும் இடமுண்டு.

கும்பம்: சூழ்நிலையில் நல்ல மாறுதல். அமைதியான வாழ்க்கையுடன் தெய்வத்தில் நம்பிக்கை தாராளமாகக் கிடைக்கும். தொழில் துறையிலும் இலாபம் கிடைக்கும்.

மீனம்: கன்னல் மொழி மூலம் காரியங்களைச் சாதிப்பீர்கள். கவர்ச்சிகரமாக உடை அணிவதற்கு விரும்புவீர்கள். ஆரம்பத்தில் எதிர்த்தவர்கள் ஆதரவு கொடுப்பதற்கு முன்வருவார்கள்.

சோதிடக்கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை.

## வவனியா பெற்றோல் நிலையம் கொள்ளையர் 'அமரே' இந்தியா தப்பியோட்டம்?

### இராணுவம், பொலிஸ் தொடர்ந்து தேடுதல்!

(வவனியா)

வவனியா பெற்றோல் நிலைய 82 ஆயிரம் ரூபா கொள்ளை தொடர்பாக ''அமரே'' என்பவரைத் தேடிப் பொலிசாரும், இராணுவத்தினரும் பம்பைமடு, பூவரசங்குளம் காட்டுப் பகுதிகளில் தேடுதல் வேட்டை நடத்தினர். ஆயினும் இதுவரை அவர் கைது செய்யப்படவில்லை

இவர் தமிழகம் தப்பியோடி இருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது.

இது இவ்வாறிருக்க இக் கொள்ளையை நடத்துவதற்கு உதவினார் என்ற சந்தேகத்தின் பேரில் கைதாகி விளக்க மறியலில் வைக்கப்பட்டிருந்த மேற்படி நிலைய ஊழியரான சபாபதி வவனியா நீதிமன்றத்தில் ஆஜராக்கப்பட்டார்.

இவரை பிணையில் விடுமாறு இவரது சகரிபில் ஆஜரான சட்டத்தரணி எஸ். சொர்ணபாலா வவனியா மாவட்ட நீதிமன்றத்தில் மனுவொன்றைத் தாக்கல் செய்தார் ஆயினும் பொலிசார் பிணை வழங்குவதை ஆட்சேபித்தனர்.

சந்தேகநபர் 45 நாட்களாக விளக்கமறியலில் இருந்து வருவதால் அவரைத் தொடர்ந்தும் விளக்க மறியலில் வைப்பது நியாயமில்லை என்று சட்டத்தரணி தெரிவித்தார்.

சட்டத்தரணியின் விவாதத்தை ஏற்றுக்கொண்ட வவனியா மாவட்ட நீதிபதி கே. பெத்தியாகொட சந்தேக நபரை 750 ரூபா உறுதிப்பிணையில் செல்ல அனுமதித்து மேல் விசாரணையை அடுத்த மாதம் 14-ம் திகதிக்கு ஒத்திவைத்தார். (கி)

## உதைபந்தாட்ட மத்தியஸ்தர் பிரச்னை: விளையாட்டமைச்சுக்கு உடனடியாக முறையீடு

(யாழ்ப்பாணம்)

யாழ் உதை பந்தாட்ட லீக்குடன் இணையாது, தனித்து இயங்கிவரும். உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கங்களின் நடவடிக்கைகளைப் பற்றி, விளையாட்டமைச்சருக்கு உடனடியாக முறையீடு செய்யவேண்டும்''.

இவ்வாறு விளையாட்டமைச்சு உத்தியோகத்தர் திரு. எம். டி. தம்பிராசா, யாழ். உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத்தின் பொதுக் கூட்டத்தில் கூறினர்.

மேற்படி சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் யாழ். உதைபந்தாட்ட லீக்கின் தலைவர் டாக்டர் ஜே. பி. ஸி பிலிப்பின் தலைமையில் யாழ். மத்திய கல்லூரி மண்டபத்தில் கூடியபோது பின்வருவோர் புதிய உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்;-

தலைவர்;- திரு. சற்சிங்கராயர், உப தலைவர்கள் திருவாளர்கள் எஸ். எம். மாட்டீன், எம். டி. தம்பிராசா, கே. ஜதுகுலசிங்கி, கே. கிருஷ்ணன், எஸ். ஏ. சந்தியாபிள்ளை, செயலாளர்:- திரு. பி. ஆர். தம்பிநாயகம், உப செயலாளர் வ. திருஞானசம்பந்தர், தனாதிகாரி திரு. ஏ. தேவராசா, நிர்வாக உறுப்பினர்கள்: திருவாளர்கள் ஈ. கே. குமரையா, ஜி ஆர். இராசசிங்கம், எஸ். கிளிபேட் அன்ரனிப்பிள்ளை, எம். பேரின்பநாயகம், யே. இம்மனுவல், எஸ். அமிர்தநாதர்.

## தாம்போதியில் சிரமதான பணி

(புலோலி)

பருத்தித்துறை, கரவெட்டி உதவி அரசாங்க அதிபர்களின் பிரிவுகளின் விசேட சேவை அலுவலர்கள் மகாசதவா தாம்போதி பாலத்தில் சிரமதான நடவடிக்கையில் ஈடுபடவுள்ளனர். இதுசம்பந்தமாக பூநகரி உதவி அரசாங்க அதிபருடன் தொடர்பு கொள்ளப்பட்டுள்ளது. (க)

## பயிற்சிநெறி

(சித்தன்கேணி)

சங்கானை, நல்லூர், சண்டிலிப்பாய் ஆகிய உதவி அரசாங்க அதிபர்பிரிவுகளைச் சேர்ந்தகிராமோதய சபைத் தலைவர்களுக்கும், விசேடசேவை உத்தியோகத்தர்களுக்கும் இம்மாதம் 17ம் திகதி அச்சுவேலியிலுள்ள கிராம அபிவிருத்திப் பயிற்சி நிலையத்தில் கணக்கு வைப்பு முறையும், அதுபற்றிய விதிகளுக்குமான பயிற்சிநெறியும் உள்ளூராட்சி அலுவலக சிரேஷ்ட ஆய்வு உத்தியோகத்தர் திரு என், குமாரதாசனினால் நடத்தப்பட்டது.

## வீடு உடைத்து ரூ 20,000 திருட்டு

(மாவிட்டபுரம்)

குடிபுகுதல் வைபவத்தையடுத்து வீடு உடைக்கப்பட்டு அங்கிருந்த பொருட்கள் திருடப்பட்டுள்ளன.

பிராம்பத்தை என்னுமிடத்தில் எஸ். தம்பிநயினார் என்பவரது வீட்டில் இத்திருட்டு இடம்பெற்றுள்ளது.

இவர்கள் புதிதாக வீடுகட்டி குடிபுகுதல் வைபவம் நடத்திவிட்டு தமது பழைய வீட்டுக்குச் சென்றுவிட்ட சமயம் இரவு நேரம் மேற்படி புதிய வீட்டை உடைத்த இனந்தெரியாதவர்கள் அங்கிருந்த பொருட்களை திருடிச் சென்றதாக தெரிவிக்கப்பட்டது. நகை, மற்றும்பொருட்கள் உட்பட 20 ஆயிரம்ரூபா பெறுமதியான பொருட்கள் திருட்டுப் போயுள்ளதாக காங்கேசன்துறைப் பொலிசில் புகார் செய்யப்பட்டுள்ளது.

பொலிசார் புலன் விசாரணை செய்து வருகின்றனர்.

## மட்டு. அ.பி.சபை கூட்டத்தில் தேவா-சீவரத்தினம் காரசாரமான விவாதம்

(மட்டக்களப்பு)

அமைச்சர் திரு கே.டபிள்யூ தேவநாயகத்துக்கும், மாவட்ட சபை அங்கத்தவர் திரு. அல்பேட் சீவரத்தினத்துக்குமிடையில் மிகக் காரசாரமான விவாதம் நேற்று நடந்தது.

மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்தி சபைக் கூட்டத்தில் மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திசபைக்குட்பட்ட உப அலுவலகங்களுக்குட்பட்ட வீதிதிருத்த வேலைகளுக்கான பணம் கொடுப்பனவுகள் அங்கீகாரத்துக்காகச் சமர்ப்பிக்கப்பட்டது. அப்பொழுது கல்குடா தொகுதியிலுள்ள மாதிரிக்கிராமத்திலுள்ள வீதிகள் திருத்தியமைக்கப்படவில்லை; ஆகையினால் அதற்கு பணம் வழங்குவதற்கு அங்கீகாரம்வழங்கக்கூடாது'' என்று தமிழர் விடுதலைக் கூட்டணி அங்கத்தவர் திரு. அல்பேர்ட் சீவரத்தினம் ஒழுங்குப்பிரச்னை கிளப்பினார். உடனே, அமைச்சர் தேவநாயகம், அதிகாரிகள் செய்யும் வேலையை நீங்கள் செய்யாதீர்கள்'' என்று கூறினார். அப்போது, இருவருக்கும் பலத்த வாக்குவாதம் ஏற்பட்டது.

அமைச்சர் தேவநாயகத்துக்கு அருகில் இருந்த பட்டிருப்பு எம்.பி, திரு.பூ. கணேசலிங்கம் குறுக்கிட்டு, சின்ன விஷயங்களுக்காகச் சண்டை பிடிக்காதீர்கள்'' என்று கூறி இருவரையும் சமாதானப்படுத்தினார். இதனையடுத்து, வாக்குவாதம் நின்றது.

1982ம் ஆண்டு இந்த மாவட்டசபைக்கூட்டத்தில். அறுபதுக்கு மேற்பட்ட பிரேரணைகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. இந்தப்பிரேரணைகள் நிறைவேற்றப்பட்டதோடு அதுபற்றி எவ்விதமான நடவடிக்கையும் எடுக்கப்படடதா என்பது குறித்து முழு அறிக்கை ஒன்று செயலாளர் சமர்ப்பிக்கவேண்டுமென்று திரு. அல்பேர்ட் சீவரத்தினம் கேட்டுக்கொண்டார்.

## மல்லாகம் கொலைவழக்கு

(யாழ்ப்பாணம்)

மல்லாகம் கொலைவழக்கில் நேற்று 2ம் எதிரி சார்பில் ஆஜரான சட்டத்தரணி வி. என். நவரத்தினம் தொகுப்புரை நிகழ்த்தினார்.

இவ்வழக்கு யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றத்தில் நீதிபதி ஜே. ஜி. ஆசீர்வாதம் முன்னிலையில் நடைபெற்றது.

இவ்வழக்கில் மல்லாகத்தில் 1976ஜூன் 7ம் தேதி ஆழகன் நாகனை கொலைசெய்ததாக செல்வராசா, கந்தசாமி ஆகியோர் மீது குற்றம்சாட்டப்பட்டிருந்தது.

1ம் எதிரிசார்பில் சட்டத்தரணி எஸ். பாலாதம்பு சட்டத்தரணி ஆர். ஜே. செல்வரத்தினத்தின் அனுசரணையுடன் ஆஜரானார். 2ம் எதிரி சாசபில் சட்டத்தரணி வி. என் நவரத்தினம் சட்டத்தரணி ஆர். ஜே செல்வரத்தினத்தின் அனுசரணையுடன் ஆஜரானார். அரசதரப்பில் அரச சட்டத்தரணி ஐ. ஞானதாசன் ஆஜரானார்.

அரசசட்டத்தரணி ஐ ஞானதாசன் தொகுப்புரை நிகழ்த்தியதைத் தொடர்ந்து 1ம் எதிரியின் சட்டத்தரணி எஸ். பாலாதம்பு தொகுப்புரை நிகழ்த்தினார். இதனைத்தொடர்ந்து 2ம் எதிரியின் சட்டத்தரணி வி. என். நவரத்தினம் நேற்றுதொகுப்புரையை ஆரம்பித்தார்.

இவ்வழக்கு இன்று காலை தொடர்ந்து நடைபெறும்.

## குட்டிமணி..!

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

காட்டுவதற்காக ஒரு கருவியாக வட்டுக்கோட்டை தொகுதி பாராளுமன்ற அங்கத்தவராக நியமிக்கப்பட நான் சம்மதித்தேன்.

''இந்த வகையில் எனதுநிய மனம், காத்திரமான பிரதி பலிப்பை ஏற்படுத்தியுள்ளது.

''இப்படியாக, காத்திரமான எதிர்ப்பைக்காட்ட எனக்கு வாய்ப்பளித்த தமிழர் விடுதலை கூட்டணிக்கும், கூட்டணி தலைவருக்கும் எனது நன்றி.

''எனது ஆட்சேபனைக் குரலுக்குத் தாளமாக நின்ற வட்டுக்கோட்டை தொகுதி வாக்காளப்பெருமக்கள்; நான் இங்கு சிறையில் இருக்கும் காரணத்தினால் எனது சேவையைப்பெறமுடியவில்லை. எனினும் அவர்கள் இலட்சியவேட்கையுடன், எனது பாராளுமன்ற நியமனத்துக்கு உறுதுணையாக நின்றனர்,

''தமிழ் மக்களின் விடுதலைக்கான எனது உணர்வுகள் துடித்துக் கொண்டிருக்கின்றன.

''அரசியல் அமைப்பின்66ம் உறுப்புரையின் (ஆ) எனும் பந்தியின் நியதிகளுக்கமைய, 'குட்டிமணி' என அழைக்கப்படும் செல்வராசா யோகச்சந்திரன் ஆகியநான், முதலாவது பாராளுமன்றத்தின் தேர்தல் இல. 80 (வட்டுக்கோட்டை) தொகுதியின் உறுப்பினர்பதவியிலிருந்து விலகிக்கொள்கிறேன் என்பதை இத்தால் தெரிவித்துக்கொள்கின்றேன்''.

## ''அபிவிருத்திசபை, மாநகராட்சிமன்ற தலைவர்கள் முழுநேர ஊழியராக வேண்டும்''

### காவலூர் கூட்டணிக்கிளை கோருகிறது

(ஏ. வி. மாணிக்கம்)

தமிழர் விடுதலைக்கூட்டணியைச் சேர்ந்த மாவட்ட அபிவிருத்திசபைத் தலைவர்கள், மாநகராட்சிமன்றத் தலைவர்கள் முழுநேர ஊழியர்களாகக் கடமையாற்றுவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை கூட்டணியின் செயற்குழு மேற்கொள்ளவேண்டுமெனக் கேட்டுக்கொள்ளும் தீர்மானம் த. வி. கூட்டணி ஊர்காவற்றுறைக்கிளையில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

காவலூர் எம்.பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம் தலைமையில் அவரது அலுவலகத்தில் இக்கூட்டம் நடைபெற்றது.

இப்பொழுது தமிழர் விடுதலைக்கூட்டணியின் கட்டுப்பாட்டின் கீழ் 6 மாவட்ட அபிவிருத்திச்சபைகளும் ஒரு மாநகரசபையும் இயங்கிவருகிறது.

வடமாகாணத்தில் யாழ்ப்பாணம், வவனியா, மன்னார், முல்லைத்தீவு ஆகிய நான்கு மாவட்டங்களிலும், கிழக்கு மாகாணத்தில் திருகோணமலை மட்டக்களப்பு ஆகிய இரு மாவட்டங்களிலுமாக 6 மாவட்ட அபிவிருத்திச்சபைகள் இருக்கின்றன.

யாழ்ப்பாணத்திலும் மட்டக்களப்பிலும் மாநகரசபைகள் இயங்கிவந்தபோதிலும், 79ல்நடைபெற்ற மாநகரசபை தேர்தல் காலத்தில் மட்டக்களப்பில் வீசியபுயல் காற்றுக் காரணமாக அங்கு தேர்தல் நடைபெறவில்லை யாழ். மாநகரசபை மட்டும் இப்பொழுது செயலாற்றிவருகிறது. மே மாதம் மாநகர சபைத் தேர்தல் இங்கும் நடைபெறவுள்ளது.

குறிப்பாக மாவட்ட அபிவிருத்திசபைத் தலைவர்களுக்கும் மாநகரசபைத் தலைவர்களுக்கும் அதிக சம்பளமும் சகல வசதிகளும் அரசாங்கத்தால் அளிக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்த நிலையில் மேற்குறிப்பிட்ட சபைகளின் தலைவர்களில் குறிப்பாக தமிழர் விடுதலைக்கூட்டணியின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் சபைகளின் தலைவர்கள் முழுநேர ஊழியர்களாக ஏன் கடமையாற்றக்கூடாதென்ற கேள்வி எழுந்துள்ளது. (மா)

## அசாமில் வன்செயல்கள் ஒருவர் பலி !

புதுடில்லி, ஜன. 24

அசாம்மாநிலத்தில் சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெறவுள்ள நேரத்தில் வன்செயல்கள் அதிகரித்துள்ளது. இவ்வன்செயலுக்கு ஒருவர் பலியானார்.

இந்திராகாங்கிரஸ்கட்சி வேட்பாளரின் பெயரைப் பிரேரித்தவரேகத்திக்குத்துக்கு இலக்காகிப் பலியானார்.

அசாம் வாக்காளர்பட்டியலில் வெளிநாட்டவர்களின் பெயர்கள் இடம் பெற்றதை ஆட்சேபித்து அங்கு கிளர்ச்சிகள் நடைபெற்று வருவது தெரிந்ததே. (வெ)

## கோர பஸ் விபத்து...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நாடு திரும்பவிருந்தார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது. இக்கோஷ்டியினர் இலங்கைக்கு இதற்கு முன்னர் விஜயம் செய்யவில்லை.

தலயாத்திரைமேற்கொண்டு இலங்கை வந்த மேற்படி கோஷ்டியில் ஒரு பெண்ணும் ஆணும் ஸ்தலத்தில் பலியாகினர். மற்றவர்களில் ஆறு பேர் ஆபத்தான காயங்களுடன் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். காயமடைந்த மிகுதி 28பேரும் கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தென்னிந்தியாவின் வட ஆற்காடு மாவட்டத்தைச் சேர்ந்த திருப்பத்தூர், தர்மபுரி ஆகிய இடங்களிலிருந்து வந்த யாத்திரீகர்கள் கோஷ்டியே விபத்துக்குள்ளானது.

விவசாயிகள், வியாபாரிகளைக் கொண்ட 36 பேர் இந்த யாத்திரையை மேற்கொண்டனர். இவர்களில் 6 பெண்களும், நான்கு சிறுமிகளும் அடங்குவர்.

இவ்விபத்தின்போது திருமதி சந்திரா ராஜா (40 வயது) என்ற பெண்ணும் ரி. எஸ். தேவேந்திரன் (35-வயது) என்ற ஆணுமே ஸ்தலத்தில் பலியானவர்களாவர். பலியான பெண்ணின் சடலம் கோரமான நிலையில் இருக்கக் காணப்பட்டது. காயமடைந்தவர்களில் 9 ஆண்களும் 3 பெண்களும், யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் ஆறுபேரின் நிலை கவலைக்கிடமாக உள்ளது. இவர்களிடம் எதுவித தகவலும்பெற முடியாதநிலையில் இருக்கிறார்கள்.

மினிபஸ் சாரதியானசெபஸ்தியாம்பிள்ளை சூசைதாசன் எதுவித காயமுமின்றி தப்பித்துக்கொண்டார். இவர் கிளிநொச்சிப் பொலிசில் சரணடைந்துள்ளார்.

விபத்தில் கோரமாக பலியான சந்திரராஜாவின் இரு பிள்ளைகளான சுமித்ரா (வயது 7), வாணி (வயது 8) ஆகியோரும் காயமுற்ற நிலையில் ''அம்மா அம்மா'' என்று தாயைக்கூப்பிட்ட வண்ணம் அழுதுகொண்டிருப்பது நெஞ்சை உருக்கியது. இவர்களின் தந்தைராஜா என்பவரே தலயாத்திரை மேற்கொண்ட கோஷ்டியினருக்கு விசா மற்றும் ஒழுங்குகளைச் செய்துகொடுத்ததாகவும், அவர் இராமேஸ்வரத்தில் நின்று இவர்களைக்கப்பலில் அனுப்பிவைத்ததாகவும், ஓரிரு தினங்களில் அவரும் இலங்கை வந்து இக்கோஷ்டியினரைச் சந்திப்பதாகசொன்னதாகவும் பயணிகளில் ஒருவரான ஜனப்பரூபாஷா (36வயது) என்பவர் கண்ணீர்சிந்திக்கொண்டு சொன்னார். (மா)

## 36பேருக்கு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

செய்யத் தேவையில்லையென்று மேலதிக சொலிசிஸ்டர் ஜெனரல் சுனில் டிசில்வா நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

இதனை சந்தேகநபர்கள் தரப்பில் ஆஜரான சிரேஷ்ட சட்டத்தரணி ரஞ்சித் அபயசூரியா ஆட்சேபித்தார்.

வழக்கு விசாரணை ஆரம்பமான பின்னரே இதுபற்றித் தீர்மானிக்க முடியுமென்று அவரும் மற்றுமிரு சட்டத்தரணிகளும் வாதிட்டனர்.

இந்தவாதத்தை ஏற்றுக்கொண்ட நீதிமன்றம் 36சந்தேகநபர்களுக்கு எதிராகவும் குற்றப்பத்திரம்தாக்கல்செய்யுமாறு உத்தரவிட்டது.

இவ்வழக்கை கொழும்பு மேல்நீதிமன்ற நீதிபதி திரு. ரூபேர்ட் சில்வா தலைமையிலான குழு விசாரணை செய்யவுள்ளது.

வழக்கு விசாரணை அடுத்த மாதம் 23-ம்திகதிஆரம்பமாகவுள்ளது.

வழக்கு விசாரணை ஆரம்பமான பின்னரே சந்தேகநபர்கள் குற்றவாளியாக அல்லது சுற்றவாளியா என்று தீர்மானிக்கப்பட்டு வழக்குவாபஸ் பெறப்படுவதுபற்றி ஆராயப்படுமென்று நீதிபதி ரூபேர்ட் சில்வா தெரிவித்தார்.

பேரவி அரிசிப்பங்கீட்டுப் புத்தகங்களைவிநியோகித்தமை குறுக்குவழியில் செல்வாக்குப் பெற்றமை, கைலஞ்சம் வாங்கியமை ஆகிய குற்றச்சாட்டுக்கள் இவர்கள் மீது சுமத்தப்பட்டுள்ளது. (வெ)

## நடவடிக்கை

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

வர் திரு. எஸ். எஸ். லெம்பேட், மன்னார் எம். பி. திரு. பி. எஸ். சூசைதாசன், மன்னார் அரசாங்க அதிபர் திரு. ஏ. ஜே. செந்தில்நாதன், மன்னார் உதவி பொலிஸ் அத்தியட்சகர் திரு. இராஜேஸ்வரன்மன்னார் மாவட்ட கடல்தொழில் விரிவாக்க அதிகாரி ஆகியோருக்கு அனுப்பிவைத்துள்ளார்.

## நித்தி நிர்மலா...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நீதிமன்றத்தில் நீதிபதிகள் டி. சி. டி. சில்வா, ஜி.பி.எஸ். பி. சில்வா ஆகியோர் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

நித்தியானந்தன், நிர்மலா நீதிமன்றத்தில் ஆஜர்செய்யும்படிகோரும் தனித்தனி மனுவை நிர்மலாவின் தந்தையான திரு. ஏ. ராஜசிங்கம் தாக்கல் செய்திருந்தார்.

மனு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது ஆட்சேபம் தெரிவிப்பதற்கு அவகாசம் வழங்குமாறு அரசசட்டத்தரணி கேட்டுக்கொண்டதை தொடர்ந்து நீதிபதிகள் 4 வாரகால அவகாசம் வழங்கி விசாரணையை பெப்ரவரி 21ம் தேதிக்கு ஒத்திவைத்தனர்.


குளோபல் அக்கடமி
GLOBAL ACADEMY
குளோபல் கொம்மியூனிகேசன்ஸ் லிமிட்.,
கூட்டுறவுப் பணிமனை,
கே. கே. எஸ். வீதி - யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 23015
1983டிசம்பர் G.C.E O/L
1983/1984 G.C.E. A/L
காலை — மாலை நேர வகுப்புகள்
ஆரம்பம்: 28-01-83
மாலை 4-30 மணி
5962



Computer Programming
WITH
PRACTICALS
29-01-83 அன்று புதிய வகுப்பு ஆரம்பம்
இன்னும் சில வெற்றிடங்கள் உண்டு
வார நாட்களில் காலை 9 மணிக்கு
உளச்சார்புப் பரீட்சைக்குத் தோற்றலாம்
விபரங்களுக்கு:
SOFTWARE CONSULTANCY
427, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
5955


இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் ... வீதி, ...-ம் இலக்க அச்சகத்தில் 1983-ம் ஆண்டு ஜனவரி மாதம் 25-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka, under number Q.B. 100236/81 Eelanaadu - P. O. Box: 49, Telegrams: Eelanaadu, Telephone: 22389 — 24126.